Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

ஈழநாடு

EELA NADU

போன்: 38 National Tamil Daily தேசிய தினசரி தபால் பெட்டி 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி மார்கழி 15 ஆம் நாள் ஷஃபான் பிறை 24 (29 12 64) செவ்வாய்க்கிழமை இதழ் 320

எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது
நத்தார் – புதுவருட வாழ்த்துக்கள்!

புதுவருட
மலிவு
விற்பனை

இரத்தினம்ஸ்
பிடவை மாளிகை
180, கே. கே. எஸ். ரோட். யாழ்ப்பாணம்.

துயருறும் மக்களுக்கு கவர்னர் ஜெனரல் ஆறுதல்

மயிலிட்டியில் அவர் நேரில் கண்டகாட்சி

சகல உதவியுமளிப்பதாக வாக்குறுதி

மாவிட்டபுரம், திங்கள்

கணவனை இழந்த மனைவியும், மைந்தனை இழந்த தந்தையும், அண்ணனை இழந்த தங்கை தம்பியும் கதறியழுத, கல்நெஞ்சையும் உருக்கக்கூடிய பரிதாபக் காட்சியை கவர்னர் ஜெனரல் திரு. வில்லியம்கோபல்லவா இன்று மயிலிட்டியில் பார்த்து அனுதாபப்பட்டார். இன்று காலை 10 மணிக்கு இலங்கை விமானப்படை விமானத்தில் பலாலி விமான நிலையத்தில் வந்திறங்கிய கவர்னர் ஜெனரல் அங்கிருந்து மயிலிட்டிக்குச் சென்று பார்த்து அங்குள்ள மக்களுக்கு ஆறுதல் கூறிவிட்டு தெல்லிப்பளை சந்தி வரை சென்று அங்கிருந்து பலாலி சென்று 11-50க்கு புறப்பட்டுச் சென்றார். (6-ம் பக்கம் பார்க்க)

'ஈழநாடு'

சூறாவளி கஷ்ட நிவாரண நிதி

இயற்கை அன்னைக்குத் தமிழர் மீது என்ன கோபமோ தெரியவில்லை! வடக்கு, கிழக்கு மாகாணங்களிலே சூறாவளிக் காற்றினால் ஒரு சிலமணி நேரத்துக்குள்ளாகச் சொல்லமுடியாத பெரும் கஷ்டங்கள் ஏற்பட்டுவிட்டன. இதைப்பற்றி வரவரக் கிடைக்கும் விவரங்களைப் பார்ப்பின், இதுவரை என்றுமே இல்லாதபடி தமிழர் வசிக்கும் பகுதியிலே பயங்கர கஷ்டநஷ்டங்கள் விளைந்துள்ளதாகத் தெரிகிறது.

அன்றாடம் ஆழ்கடலிலே வெகுதூரம் சென்று மீன்பிடித்து வரும் அன்பர்களில் நூற்றுக்கணக்கானவர்கள் புயலில் சிக்கி அவர்களது சடலங்கள் இந்தியாக் கரையில் ஒதுக்கப்பட்டுள்ளனவாம்! இதை அறிய அவர்களது குடும்பத்தாரின் மனம் என்ன பாடுபடும்! அவர்கள் ஜீவனத்துக்கு இனி என்ன செய்வர்?

இன்னும் இந்தப் புயலாலும் வெள்ளத்தாலும் எத்தனை எளிய குடும்பங்கள் பரதவிக்கின்றனவோ! இம்முறை மழை பெய்யாததால், எல்லாக் கமக்காரருக்கும் பெரும் நஷ்டம். இதுபற்றி பெரும் கவலைப்பட்டுக்கொண்டிருக்கையில், சூறாவளியும் வெள்ளமும் வந்து, மரங்களை முறித்து, குடியிருப்பு வீடுகளை இடித்துத்தள்ளி, பல பல குடும்பங்களையும் நடுத்தெருவிலே தவிக்கவிட்டுவிட்டது பெரும் சூறாவளி.

இந்நிலையில் இதற்கெல்லாம் தப்பியுள்ள நாம் என்ன செய்யவேண்டுமென்பதே முக்கிய கேள்வி. புயலாலும் வெள்ளத்தாலும் பரிதவிக்கும் எளிய மக்களின் கண்ணீரைத் துடைக்க நம்மால் கூடுமானதையெல்லாம் செய்யவேண்டும். அவர்களிடம் நாம் எவ்வளவு கருணை காட்டுகின்றோமோ, அவ்வளவுக்கு தெய்வம் நமக்குக் கருணை காட்டும்.

தமிழ் மக்களின் சேவையையே தனது முக்கிய பணியாகக் கொண்டுள்ள 'ஈழநாடு' கஷ்டநிவாரண நிதி திரட்ட முன்வரவேண்டுமென்று சில தமிழ்த்தாய்மார்கள் முன்வந்து ஊக்கி ரூபா 250 க்குக் காசோலையும் அன்பாக அனுப்பிவைத்தனர். புரக்டர் திரு எஸ். சிவசுப்பிரமணியம் ரூபா 10 அளித்து நிதிக்கு ஆசிகூறியுள்ளார். மக்கள் சேவையே மகேஸ்வரன் சேவையாகும் நம் மக்களுக்கு உதவுவது நமக்கு நாமே செய்துகொள்ளும் உதவியாகும்.

பணத்தை

"புயல் கஷ்டநிவாரண நிதி"
"ஈழநாடு" த. பெ. 49, யாழ்ப்பாணம்,

என்ற விலாசத்துக்கு அனுப்பிவைக்கவும். வசூல் விவரங்களை அவ்வப்போது பத்திரிகையில் வெளியிடுவோம்.

வசந்தா டெக்ஸ்டைல்ஸ் யாழ்ப்பாணம் ...	ரூ.	250-00
திரு. எஸ். சிவசுப்பிரமணியம், ...	ரூ	10-00
"ஈழநாடு" முதல் தவணை ...	ரூ.	250-00
பாரிஸ்டர் எம். சிவானந்தன், கொடிகாமம் ...	ரூ.	50-00
அட்வகேட் ரீ கணேசலிங்கம் யாழ்ப்பாணம் ...	ரூ.	50-00
புரக்டர் ரீ சங்கரப்பிள்ளை, யாழ்ப்பாணம் ...	ரூ.	10-00
விவேகானந்த ரெக்ஸ்ரைல்ஸ், யாழ்ப்பாணம் ...	ரூ.	25-00
அனந்ததேவன், கச்சேரி ...	ரூ.	10-00
கு. குப்புசாமி, யாழ்ப்பாணம் ...	ரூ.	5-00
ஆசீர்வாதம் வென்சஸ்லஸ், சுன்னாகம் ...	ரூ	5-00

6 மாதம் திருமலை துறைமுகம் உபயோகிக்கமுடியாது

மன்னாரில் உணவு சப்ளை போதாததால் பலர் பட்டினி

கொழும்பு, திங்கள்

புயலினால் சேதமுற்ற திருக்கோணமலை துறைமுகம் இன்னும் 6 மாதங்களுக்கு உபயோக மற்றுப் போகும் என போக்குவரத்து அமைச்சு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (6-ம் பக்கம் பார்க்க)

நிக்கலஸ் மீண்டும் உபவேந்தர்

கொழும்பு, திங்கள்

70 வயதான சர் நிக்கலஸ் அட்டிகலை இலங்கைப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தராக மீண்டும் இன்று தெரிவுசெய்யப்பட்டார். அவருக்கு 49 வாக்குகளும் பேராசிரியர் விஜயசேகராவுக்கு 36 வாக்குகளும் கிடைத்தன. இதர அபேட்சகர்கள் எவருக்கும் ஒரு வாக்குக்கூட கிடைக்கவில்லை என அறிவிக்கப்பட்டது.

அரசாங்க

சூறாவளி நிதிக்கு ரூ. 50,000

கொழும்பு, திங்கள்

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் 4 லொறிகள் நிறைய உணவுப் பொருட்களை புயலால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு அனுப்பியது.

அரசாங்க ஊழியர்கள் தங்கள் நன்கொடைகளை வழங்கும் பொருட்டு சம்பளத்தில் கழிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

பாதிக்கப்பட்ட இ. போ. ச. ஊழியர்களுக்கு ஒரு மாதச் சம்பளத்தை முன்பணமாக வழங்க இ. போ. சபை முன்வந்திருக்கிறது.

அரசாங்க சூறாவளி நிதிக்கு இதுவரை 50000 ரூபாய் சேர்ந்திருக்கிறது.

தமிழ்ப்பகுதிகளில்

அங்கத்தவர்களை போட்டியின்றி தெரிவுசெய்ய முன்வருக

தமிழரசுத் தலைவருக்கு ஜி. ஜி. வேண்டுகோள்

யாழ்ப்பாணம், செவ்வாய்

பத்திரிகைச் சுதந்திரத்தையும், ஜனநாயகத்தையும் பாதுகாப்பதற்காக திரு. அமிர்தலிங்கமும், திரு. ராஜரத்னவும் ஒரே மேடையில் தோன்றும்போது, தமிழ் மக்களின் உரிமைகளைபெறுவதற்காக திரு செல்வநாயகமும் திரு. பொன்னம்பலமும் ஒரே மேடையில் தோன்றி ஒத்துழைக்கமுடியாதா? என்று தமிழ் பேசும் மக்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். தமிழ்ப் பகுதிகளிலிருந்து சகல அங்கத்தவர்களும் ஜனவரி 11-ந் திகதி போட்டியில்லாமல் தெரிவுசெய்யப்பட்டால் முழு இலங்கையும் கிடுகிடுக்கும். ஆதலால் போட்டியின்றி திறமைசாலிகளை அனுப்ப முன்வருமாறு நான் திரு. செல்வநாயகத்தை பணிவுடனும் தாழ்மையுடனும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் நேற்று மாலை நடைபெற்ற அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கூட்டத்தில், தலைமை வகித்த தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு ஜி. ஜி. பொன்னம்பலம் பேசும் போது இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:

"எனக்கு பாராளுமன்றம் போக ஆசையில்லை. எம். பி. யாக வரவேண்டுமென்ற விருப்பமில்லை. ஆனால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தை போக்குவதற்காக எனது சேவையை மக்கள் விரும்பிக் கேட்டுள்ளதால் தான் உங்கள் முன்னிலையில் நான் வந்துள்ளேன். பாராளுமன்றத்திற்கு சென்றுதான் எனக்கு பெரும்புகழும் கிடைக்கவேண்டும் என்ற நிலையில் நான் இருக்கவில்லை.

ஜனநாயகத்தை பாதுகாக்கவேண்டும்

இலங்கையின் சரித்திரத்தில் இன்றிருக்கும் அபாயமான நிலைபோல் என்றும் இருந்ததில்லை. இலங்கை மக்கள் ஜனநாயக ஆட்சியில் வாழ்வதா? சர்வாதிகார ஆட்சியில் செத்து மடிவதா என்பதுதான் பிரச்னை. அதையிட்டுத்தான் தேர்தல் நடைபெறுகிறது. இந்த நிலையில் சிறுபான்மையினரான தமிழ் மக்கள் வடகீழ் பகுதியில் மட்டும் ஒதுங்கி வாழ்ந்து வருவதா அல்லது முழு இலங்கையிலும் தோளோடு தோள் நின்று ஜன

(6-ம் பக்கம் பார்க்க)

மணிவாக்கு

ஒவ்வொரு கண்ணின் கண்ணீரையும் துடைப்பதே மனிதனின் இலட்சியமாக இருக்க வேண்டும்.
— மகாத்மாகாந்தி

ஈழநாடு
EELA NADU

EELA NADU National Tamil Daily. Post Box: 49, Jaffna.
Telegrams: 'EELA NADU' Jaffna
Phone: 389.

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு
மார்கழி மீ 15 உ (29-12-64)

கவர்னர் ஜெனரலின் ஆறுதல்

சூறாவளிக்குப் பலியானவர்களின் குடும்பத்தினருக்கு கவர்னர்ஜெனரல் நேற்று வந்து ஆறுதல் கூறிச் சென்றிருக்கிறார். சாத்தியமான சகல உதவிகளையும் அரசாங்கம் அவர்களுக்குச் செய்யுமென்றும் அவர்களுக்கு வேண்டிய உதவிகளனைத்தையும் உடனடியாகச் செய்து கொடுக்கும்படியும் யாழ்ப்பாண அரசாங்க அதிபருக்கு கவர்னர் ஜெனரல் உத்தரவிட்டிருக்கிறார்.

யார் வந்து ஆறுதல் கூறினாலும் போனஉயிர் திரும்பி வந்துவிடப் போவதில்லையென்பது உண்மையே. மாண்டவர்களையே நினைத்து அழுது கொண்டிருப்பதால் அவர்கள் மீண்டும் வரப்போவதில்லை. உயிர்நீத்தவர்கள் யாருடைய வாழ்வுக்காக தங்களுடைய உயிரையே அர்ப்பணித்தார்களோ, அவர்கள் கனவுகண்டு வந்த, அவர்களின் அன்புக்குரிய மனைவி, மக்கள், தாய் தந்தையர் அண்ணன் தம்பி, அக்கா தங்கை ஆகியோரின் வாழ்க்கை செம்மையுற வேண்டும். உயிர்பிரியும் தறுவாயிலும்கூட இந்த அன்புக்குரியவர்களின் எதிர்காலத்தை எண்ணியபடியே தான் உயிர் நீத்திருப்பார்கள் என்பது நிச்சயம். இறந்தவர்களின் ஆத்மா சாந்தியடைய வேண்டுமெனில் அவர்களின் அன்புக்குரியவர்கள் கண்கலங்காமலிருக்க வழிசெய்ய வேண்டும்.

வானிலை அவதான நிலையம் சரியான சமயத்தில் சரியான தகவலைக் கொடுத்திருந்தாலும் கடற்படையினரும் அரசாங்கமும் உடனடியாக நடவடிக்கை எடுத்திருந்தாலும் பல உயிர்களைக் காப்பாற்றியிருக்கலாம் என்பது உண்மையேயாயினும் நடந்து போனவைகளைப்பற்றி இன்னும் ஆராய்ச்சி செய்வதால் பிரிந்த உயிர்கள் திரும்பி விடா. எதிர்காலத்திலும் இதுபோன்ற பேரழிவு ஏற்படாமல் தடுக்க இந்த அனுபவம் உதவுவதாக இருக்கலாம்.

சூறாவளியினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரசாங்கம் சாத்தியமான உதவிகள் அனைத்தையும் செய்யுமென கவர்னர்ஜெனரல் வாக்குறுதியளித்திருப்பது சற்று ஆறுதலளிக்கக் கூடுமெனினும் அரசாங்கம் அளிக்கும் உதவி இந்தக் குடும்பங்களுக்கு எந்த அளவுக்குப் பயன்தரும் என்பதைச் சொல்ல முடியாது. சூறாவளியின் கோரத்தாண்டவம் மத, இன பிரச்னையல்ல உயிர்ப்பிரச்னை, இதில் அரசியல், இன, மத வேறுபாடுகளுக்கு இடமில்லை. மந்திரிமார் சிலர் சுற்றிப்பார்த்துவிட்டு ஒருபகுதியைப்பற்றியே பெரிதுபடுத்திக் கூறியபோது இப்பிரச்னையில் அரசியலும் இனமும் புகுந்துவிட்டதோ என்று பலரும் அஞ்சினர். நல்லகாலமாக கவர்னர் ஜெனரல் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு நேரில் சென்று நிலைமையைப் பார்த்திருக்கிறார். அழிவின் தன்மையையும் சேதத்தின் அளவையும் சரியாக மதிப்பிட்டு அதற்குத் தகுந்தவிதத்தில் உதவியளிக்க கவர்னர் ஜெனரலின் விஜயம் உதவ வேண்டும். அரசாங்கத்தின் உதவிமட்டும் பாதிக்கப்பட்டமக்களின் வாழ்க்கையைச் சீர்செய்யப் போதும் என்று திருப்திப்படாமல் கண்ணீரும் கம்பலையுமாக நிற்கும் சகோதர சகோதரிகளுக்கு தாராளமாக உதவி செய்ய வேண்டியது நம் ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும்.

"விஞ்ஞான வளமுள்ளதாக தமிழ்மொழி திகழவேண்டும்"

கணேசையர் தமிழ்ச் சங்க விழாவில் பேச்சு

காங்கேசன்துறை, திங்கள்

'இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழுடன் விஞ்ஞானத் தமிழ் என்னும் புதிய தமிழும் உருவாகி வளரவேண்டும். இத்துறையில் கணேசையர் தமிழ்ச் சங்கம் ஈடுபட்டு தமிழில் புதியதோர் துறையில் மறுமலர்ச்சி ஏற்படுத்த வேண்டும்' என்று தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிஅதிபர் திரு. தெ. து. ஜெயரத்தினம் மாவிட்டபுரம் கணேசையர் தமிழ்ச்சங்கத்தின் நான்காவது தமிழ் விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

மாவிட்டபுரம் கணேசையர் தமிழ்ச்சங்கத்தின் நான்காவது தமிழ்விழா நிகழ்ச்சிகள் மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் வடக்குவீதியிலுள்ள சின்னப்புமடத்தில் அலங்கரிக்கப்பட்ட நவநீத கிருஷ்ண பாரதி அரங்கில் நடைபெற்றன. காங்கேசன்துறைப் பட்டினசபை முன்னாள் தலைவர் திரு மு. திடவீரசிங்கம் குத்துவிளக்கு ஏற்றிவைத்து விழாவை ஆரம்பித்துவைத்தார்.

விழாவுக்குத் தலைமைவகித்த தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி அதிபர் திரு. தெ து. ஜெயரத்தினம் தொடர்ந்து பேசியதாவது:-

தமிழின் பெருமை

நாமிருக்கும் இக்காலத்தை விஞ்ஞான சகாப்தமெனக் கூறிவிடலாம். விஞ்ஞான அறிவில்லாவிட்டால் குருடர்களாகவும் செவிடர்களாகவும் வாழவேண்டி நேரிடும். தென் ஆசிய நாடுகளிலும் ஆபிரிக்காக் கண்டத்திலும் அதிகமாகப் பேசபபடுவரும் நம் தமிழ் மொழி விஞ்ஞானவளமுள்ளதாய்த் திகழவேண்டும். எந்தமொழியில் விஞ்ஞான வளத்தினை வளர்க்கக்கூடிய அறிவு ஆற்றல் படைத்த பெரியோர் இதில் ஈடுபடுவது மிக அவசியமானது. இயல் இசை, நாடகம் போலவே விஞ்ஞானத் தமிழும் உருவாகி வளர்ந்து எமக்கெல்லாம் பெருமையையும் வருஞ்சந்ததியாருக்குப் பெரும் பயனையும் தரவேண்டும்.

தமிழ் மக்களிடையே விஞ்ஞானம் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னே நிலவிவந்திருக்கிறது. தமிழில் அழிந்துபோன விஞ்ஞான நூல்கள் பல. எங்கள் இலக்கிய நூல்களிலும் சமயநூல்களிலும் விஞ்ஞானக் கருத்துக்கள் பரவிக் கிடக்கின்றன. தமிழர் தான் தாமிருக்கும் உலகினை முதன்முதல் ஆராயத் தொடங்கினர்.

இலக்கியப் பெண்கள்

பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி 'கம்பன் கண்ட சீதை' என்னும் பொருள் பற்றிப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

பிறந்தகுலத்திற்கும் புகுந்த குலத்திற்கும் பெருமை தேடிக் கொடுத்தவள் சீதை. இதனை அனுமன் வாயிலாக கம்பன் அழகாகக் காட்டுகிறான். சமுதாயத்திலே பெண்கள் உயர்வாக மதிக்கப்படவேண்டுமானால் சீதை, கண்ணகி போன்ற இலக்கியப் பெண்களின் சீரிய வாழ்க்கைமுறையினைக் கற்றுத் தேறவேண்டும்.

சிறந்த இல்லாளாக, உயர்ந்த பதிபக்தியுடையாளாக, கற்புக்கடகம் பூண்ட தெய்வமாக, அரசியல் ஞானமுள்ளவளாக சீதை திகழ்கின்றாள். இந்தப் பண்புகளை இன்றைய பெண்குலம் மிகுதியும் அறிந்து பின்பற்றுதற்குரியன."

கடவுள் நம்பிக்கை குறைகிறது

வலி-வடக்கு காரியாதிகாரி திரு. டி. முருகேசம்பிள்ளை பேசியதாவது-

தமிழர்கள் தமது மொழி மீதும் சமயத்தின்மீதும் உண்மையாகவே பேரன்புடையவர்களாக இருந்திருப்பின் தெய்வ தண்டனை கிடைக்கப் போவதில்லை. கடந்தவாரம் வீசிய புயலும் மழையும் கடவுள் நம்பிக்கை குறைந்த காரணத்தினாலே ஏற்பட்டன. இதனை ஆராய்ச்சியுள்ளம் கொண்டோர் உணர்வர்

நமது முன்னோர்கள் காட்டிய வாழ்க்கை நெறிமுறைகளைப் பின்பற்றி அவ்வழிச் சென்று ஈடேற வேண்டியது நமது கடமை. திரிகரணசுத்தியோடு தமிழன் தனது உள்ளத்தில் மாசு, மறுவற்ற வாழப் பழகிக் கொள்ளல் வேண்டும். தமிழ்ப் பெரியாரான கணேசையரின் நினைவாகச் செயல்பட்டுவரும் கணேசையர் தமிழ்ச்சங்கம் புதிய பணிகளில் ஈடுபட வேண்டும். விஞ்ஞானத் தமிழ் உருவாகும் காலம் தூரத்திலில்லை."

இளைஞர் தொண்டு

சைவபூஷணம் நம. சிவப்பிரகாசம் பேசியதாவது-

இளைஞர்கள் நல்ல தொண்டுகள் செய்யும் இயக்கங்களில் பங்கு கொள்ள வேண்டியது அவசியமாகும். நல்ல பணிகளைச் செய்யும் ஆர்வம் இளைஞர்களுக்கு ஊட்டப்படல் வேண்டும். அப்போதுதான் அவர்களுக்கு தமது கடமைகள் தெரியவரும், இலங்கையின் பலபாகங்களிலும் தமிழ் வேகமாக வளர்கின்றது என்பதனை கணேசையர் தமிழ்ச் சங்கக் கட்டுரைப் போட்டி மூலம் உணரும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது."

சங்கச் செயலாளர் திரு இரா. சுந்தரராஜசர்மா அனைவரையும் வரவேற்றுப் பேசினார். மாவைக் கவிஞர் பண்டிதர் க. சச்சிதானந்தன் பாமாலை நிகழ்ச்சியிற் கலந்து கொண்டார். கட்டுரைப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் ஆதீனகர்த்தா சிவஸ்ரீ க. துரைசாமிக் குருக்கள் பரிசுகளை வழங்கினார் நாதசுரகான கலாநிதி என். கே. பத்மநாதன் குழுவினரின் நாதசுர இன்னிசை, தமிழ்மணி என். கணேசசுந்தரனின் வில்லுப்பாட்டு என்பனவும் விழாவில் இடம்பெற்றன.

துணுக்காயில் ஏற்பட்ட சேதங்கள்

துணுக்காய், திங்கள்

கடும்மழை, சூறாவளி காரணமாக துணுக்காய்ப் பகுதியின் சகல பகுதிகளும் பாதிக்கப்பட்டிருந்தன. பாதைகள் யாவும் துண்டிக்கப்பட்டு இன்றுமுதல் வெளியாக்கப்பட்டு வருகின்றன.

யோகபுரம் முதலாம், இரண்டாம் பகுதி வவுனிக்குளம் குடியேற்றத்திட்டம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன. வீடுகளில் ஓடுகள் இல்லாததால் மக்கள் தங்குவதற்கு இடமின்றிக் கஷ்டப்படுகின்றார்கள். தற்பொழுது அகதிகள் மல்லாவி அரசினர் ஆஸ்பத்திரியிலும் யோகபுரம் மகாவித்தியாலயத்திலும் முகாமிட்டுள்ளனர். இப்பகுதிகளில் தென்னை, மா, பலா, தோடை, வாழை முதலிய பயிர்களும் நெற்பயிரும் காற்றினால் பெருத்த சேதத்திற்குள்ளாகி உள்ளன. யோகபுரம் மகா வித்தியாலயத்தில் ஒரு கட்டடத்தின் ஓடுகள் எடுத்தெறியப்பட்டதுடன் ஆசிரியர்களின் வாடி வீடுகளும் சேதத்திற்குள்ளாகின.

மல்லாவியில் ஸ்ரீ பாலசுப்பிரமணியர் ஆலயம் பலத்த சேதத்திற்குள்ளாகி உள்ளது. மல்லாவி ஆஸ்பத்திரியிலும் ஒரு பகுதிக் கூரை சேதமாகிவிட்டது கோணி அபிவிருத்திப் பகுதியினரின் மல்லாவிக் கிளை அலுவலகம் பெரும் சேதமாகிவிட்டது இவர்களின் ஸ்டோரும், கந்தோர் அறை, கூலியாட்களின் வாடி. பாரதி கி மு. சங்கம் ஆகிய கட்டடங்கள் இருந்த இடங்களும் தெரியாதிருக்கின்றன மல்லாவி ஸ்ரீ பாலசுப்பிரமணியர் கிராம முன்னேற்றச் சங்கத்தின் புதிய கட்டடத்தின் கூரை காற்றினால் சேதப்படுத்தப்பட்டுள்ளது.

துணுக்காய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மற்றைய சங்கங்களிலும் பார்க்கப் பலத்த சேதத்துக்குள்ளாகியிருக்கின்றது புடவை, மாவு, பசளை, சீனி, சர்க்கரை, உப்பு ஆகிய பொருட்கள் நனைந்து கரைந்துள்ளன. துணுக்காய் நீர்ப்பாசன அலுவலகத்தின் கூரைத் தகடுகள் யாவும் அரை மைல் தூரத்திற்கு அப்பாலுள்ள காடுகளிலிருக்கின்றது

கல்விளான், உயிலங்குளம், ஆலங்குளம் ஆகிய இடங்களிலுள்ள பாடசாலைகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன இதனால் இப்பகுதியிலுள்ள மக்கள் முகாமிடுவதற்கே இடமின்றிக் கஷ்டம் அடைகின்றார்கள். இப்பகுதிகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன இதேபோல் பல்லவராயன்கட்டும், பூநகரி, தம்பிராவை ஆகிய பகுதிகளும் வெகுவாகப்பாதிக்கப்பட்டிருக்கின்றது, தந்திக் கம்பிகள் யாவும் அறுந்துவிட்டதுடன் தந்திக்கம்பங்களும் சரிந்துவிட்டன. துணுக்காய் தபால் நிலையம் வெள்ளத்தால் நன்கு பாதிக்கப்பட்டுவிட்டது தபால் தந்திச் சேவை துண்டிக்கப்பட்டுள்ளது.

"கஜபாகு"வின் மற்றுமொருசேவை

கொழும்பு திங்கள்

சூறாவளியாலும் வெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு, உடை, வைத்திய வசதிகள் அளிக்கும்பொருட்டு உணவுப் பொருள்களுடன் மன்னார் வந்தடைந்த இலங்கை கடற்படைக்கப்பலான "கஜபாகு" ஓரிருதினங்களில் கொழும்பு திரும்பியதும் மீண்டும் அது உணவுப்பொருள்களையும் மருந்துகளையும் ஏற்றிக்கொண்டுமன்னார் புறப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியருக்குக் கடிதங்கள்

நலிவுற்றோரும் தேர்தல்பணமும்

பொதுமக்களுக்குத் தொண்டாற்றும் நோக்கத்துடன் பலர் போட்டியிட முன்வந்துள்ளனர். இச்சமயத்தில இயற்கை அன்னையின் சீற்றத்தால் வடக்கு—கிழக்கு மாகாணத்தில் பரிதவிப்போரை எண்ணிப்பார்க்காமல் இருக்க முடியாது. குறிப்பாக திருக்கோணமலை, வவுனியா, மன்னார் யாழ்ப்பாணத்தில் வதியும் தமிழ்பேசும் மக்கள் வீடுகளை இழந்து, குடிபெயர்ந்து, உடைமைகளை இழந்து உணவின்றிப் பரிதவிப்பதாகச் சோகச் செய்திகள் தினமும் வந்துகொண்டிருக்கின்றன. பல மீனவர்களைக் கடலுக்கு இரையாகப் பலிகொடுத்துத் தவிக்கும் குடும்பங்களின் புலம்பல் கல்நெஞ்சையும் கரையச் செய்யும்.

பொதுத்தேர்தலில் பணத்தைப் பணம் என்று பாராமல் இறைத்து பாராளுமன்ற ஆசனத்துக்காகப் போட்டியிடும் பெரியவர்களின் சேவை பாராளுமன்றத்தில் மட்டுமல்ல, நாட்டிலும், நலிவுற்றோர் மத்தியிலும் தேவைப்படுகின்றது தேர்தலில் செலவிட எண்ணி ஒதுக்கியுள்ள பணத்தை இயற்கை அன்னையின் சீற்றத்திற்குப் பலியானவர்களுக்குக் கொடுத்து, தியாக சிந்தையும், சேவை மனப்பான்மையையும் வெளிக்காட்டவேண்டும். இத்துடன் ஒரு கட்டுக்கோப்புடையவர்களைப் பாராளுமன்றத்திற்கு போட்டியின்றித் தமிழ்ப்பகுதிகளிலிருந்து அனுப்பவேண்டுமென்ற மக்களின் எண்ணத்தையும் பூர்த்திசெய்தவர்களாவார்கள்.

"குமாரச்செல்வன்"
ஏழாலை மேற்கு.

⁂

ஒவ்வொரு தொகுதியிலிருந்தும் தகுதியானவர்களைப் போட்டியின்றித் தெரிவுசெய்து பாராளுமன்றத்துக்கு அனுப்பவேண்டும். இதுவே இன்று முக்கியம்.

ஆ. சி. சாந்தகுரு,
கந்தரோடை.

⁂

ஏன் பராமுகம்?

வட்டக்கச்சி இராமநாதபுரத்தில் குடியேறியிருக்கும் எங்கள் எழுநூறு குடும்பங்களுக்கு இன்றுபோல் கடுமையான சோதனை இதுவரை ஏற்பட்டதில்லை. சூறாவளியினால் வீடுவாசல் மரம்செடி, பயிர், ஆடுமாடு ஆகியவைகளை இழந்து அநாதைகளாக நிற்கிறோம். கல்நெஞ்சம் உடையவர்களும் கண்கலங்குவர். ஆனால் அரசாங்கம் பராமுகமாக இருப்பது ஏன் என்றுதான் தெரியவில்லை. அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரும் இங்கு வந்து எமது கஷ்ட நிலைமையைக் கவனிக்கவில்லை, பதவியாவில் ஏற்பட்ட சேதம் போன்றதான எமது குடியேற்றப் பகுதியிலும் ஏற்பட்டிருக்க முடியும். அந்த இடத்தைப்பற்றிக் கவலைப்படும் மந்திரிமார் எமமைப் பற்றிக் கவலைப்படாதது ஏனோ!

டி. எஸ். சின்னத்துரை
இராமநாதபுரம்,
கிளிநொச்சி.

சூறாவளி சேதம்

யாழ்ப்பாணம், செவ்.

சூறாவளியினால் பாதிக்கப்பட்ட இடங்களில் ஏற்பட்ட சேதங்களை திருத்தி இப்பகுதிகளை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டுவருவதற்கு இன்னும் பல கிழமைகளாகுமென்று தெரியவருகிறது. இறந்த சடலங்களை மீட்பதில் தொடர்ந்து இலங்கை கடற்படைப்பகுதியினர் கவனம் செலுத்துகின்றனர். இறந்தவர்களின் சரியான பட்டியலை இன்னும் எவரும் தாரிக்கவில்லை

பூகம்பத்தினால் இரு கிராமங்கள் அழிவு!

தெற்கு ஈரானில் சம்பவம்; 1000 பேர் மாண்டதாக தகவல்

டெஹ்ரான் டிச. 28

தெற்கு ஈரானில் நேற்று ஏற்பட்ட பயங்கர பூமியதிர்ச்சியினால் இரண்டு கிராமங்கள் முற்றாக அழிந்துவிட்டன. இந்தப் பூமியதிர்ச்சியினால் ஆயிரத்துக்குமதிகமானவர்கள் மாண்டிருக்கலாம் என்று உத்தியோக பூர்வமற்ற செய்திகள் கூறுகின்றன. சேதவிபரங்கள் எதுவும் உடனடியாக அறிவிக்கப்படவில்லை.

நான்கு வருடங்களுக்கு முன்னர் டெஹரானில் ஏற்பட்ட பூமியதிர்ச்சியில ஆயிரம் பேர் மாண்டனர்.

தெற்கு ஈரானில் ஏற்பட்ட பூமியதிர்ச்சி குறித்து பல நாட்டுத் தலைவர்கள் அனுதாபம் தெரிவித்துள்ளனர்.

இராமேஸ்வரத்தில்

மாண்டவர் தொகை 800 ஆக அதிகரிப்பு

1,500 பேர் மீட்கப்பட்டனர்; 2 கோடி ரூபாய் நஷ்டம்

சென்னை, டிச. 18

கடந்த புதன்கிழமை தனுஷ்கோடியில் ஏற்பட்ட கடல் கொந்தளிப்பு காரணமாக பாதிக்கப்பட்டவர்களைக் கண்டுபிடிக்கும் வேலைகள் இன்றுடன் பூர்த்தியடைந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மீட்பு வேலைகளில் தீவிரமாக ஈடுபட்டிருந்த இரண்டு இந்தியக் கடற்படைக் கப்பல்கள் நேற்று மாலைவரை 1,500 பேரை மீட்டுள்ளது. கடல் கொந்தளிப்பு காரணமாக இராமேஸ்வரம் தீவில் இரண்டு லட்சம் ரூபாய் வரை சேதமேற்பட்டுள்ளதாக உத்தியோகப் பற்றற்ற முறையில் அறிவிக்கப்பட்டது.

கடல் கொந்தளிப்பு காரணமாக பாதிக்கப்பட்டவர்களைக் கண்டுபிடிக்கும் வேலைகள் இன்றுடன் முடிவடைந்துவிட்டன. இராமேஸ்வரம் தீவில் ஒரு பகுதியில், கடல் கொந்தளிப்பு காரணமாக 3000 பேர் பாதிக்கப்பட்டு உயிருடன் போராடிக்கொண்டிருந்ததாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இந்திய கடற்படைக் கப்பல்களின் துரித சேவையினால் இவர்களில் 1,500 பேர் மீட்கப்பட்டு பாதுகாப்பான இடத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டதாக நேற்று மாலை அறிவிக்கப்பட்டது. மிகுதியான 1,500 பேரும் பத்திரமாக இருப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன. மற்றுமொரு பகுதியில் சிக்கித்தவித்த 520 பேரையும் கடற்படைக் கப்பல்கள் பாதுகாத்தன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

800 பேர் மாண்டனர்

இராமேஸ்வரம் தீவில் மாண்டவர்களின் எண்ணிக்கை 600 என்றும் பின்னர் அது 700 ஆக அதிகரித்திருப்பதாகவும் முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் கடைசியாக மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின்படி இப்பகுதியில் உயிரிழந்தவர்களின் தொகை 800-க்கும் அதிகம் என்று கூறப்படுகிறது.

சேவைகள் ஆரம்பம்

இராமேஸ்வரம் தீவில் நேற்றுமுதல் படகுச் சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருப்பதால், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு, உடை விநியோகம் இப்பொழுது படகுகள்மூலம் நடைபெறுகிறது. விமானமூலம் உணவு விநியோகம் இன்றுமுதல் நிறுத்தப்படும்.

இராமேஸ்வரம் தீவில் பாதிக்கப்பட்ட பகுதிகளை இந்திய நிதி மந்திரி திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி இன்று பார்வையிட்டார். கடல் கொந்தளிப்பு, சூறாவளியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு எவ்வளவு பணம் ஒதுக்கப்படும் என்பது இரண்டு மூன்று தினங்களில் அறிவிக்கப்படும்.

ரயில் சேவைகள்

இராமேஸ்வரம் தீவையும் மண்டபத்தையும் இணைக்கும் பாம்பன் பாலம் கடல் அலைகளினால் அடித்துச் செல்லப்பட்டிருப்பதால், இந்தப் பாலத்தினூடான ரயில் சேவைகள் எப்பொழுது மீண்டும் ஆரம்பமாகும் என்று தெரியவில்லை. ரயில் சேவைகள் மீண்டும் ஆரம்பமாக சில மாதங்கள் செல்லலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இலவசமாக புளியமரம்!

கொடிகாமம், திங்கள்

கொடிகாமம் சந்தையில் பருத்தித்துறை வீதிக்கருகே நிற்கும் பெரிய புளியமரத்தை இலவசமாக கொடுப்பதென கச்சாய் கிராம சபை கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

கச்சாய் கிராமசபைத் தலைவர் திரு. தி. க. சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், புளிய மரத்தை இலவசமாக பெறுபவர் அருகே உள்ள கட்டடங்களுக்கு எதுவித சேதமேற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்றும், ஒரு மாத காலத்திற்குள் புளியமரத்தை வெட்டிவிடவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

ஏழைப் பிள்ளைகளுக்கு இலவச புத்தகங்கள்

யாழ்ப்பாணம், திங்கள்

சுமார் 1500 ஏழைப்பிள்ளைகளுக்கு இலவசமாகப் புத்தகங்கள் வழங்கக் கூடிய வகையில் சுன்னாகம் பட்டினசபை தனது 1965-ம் வருட வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 3000 ஒதுக்கியுள்ளது. 11 பாடசாலைகளில் கல்வி பயிலும் ஏழைப்பிள்ளைகளுக்கு இலவசப் புத்தகங்கள் வழங்கப்படவிருக்கிறது.

மாதர் மகாநாடு

பங்களூர், டிச. 28

பங்களூரில் இன்று காலை மாதர் மகாநாடொன்று ஆரம்பமானது. இந்த மகாநாட்டில் நாட்டின் பல பகுதிகளையும் சேர்ந்த நூற்றுக்கணக்கான மாதர்கள் கலந்துகொண்டனர்.

குடும்ப கட்டுப்பாட்டின் அவசியம் குறித்து இந்தமகாநாட்டில் ஆராயப்பட்டது.

மணிலாவில் ஆர்ப்பாட்டம்

மணிலா, டிச. 28

பிலிப்பைன்ஸின் தலைநகரமான மணிலா அருகேயுள்ள அமெரிக்க தளத்துக்கு முன்பாக நேற்று 6,000 பிலிப்பைன்ஸ் நாட்டினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

அமெரிக்க தளத்தினுள் ஊடுருவல் செய்த குற்றத்துக்காக பிலிப்பைன்ஸ் பிரஜைகள் சிலர் சுட்டுக் கொலைசெய்யப்பட்டதைக் கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம் நேற்று மேற்கொள்ளப்பட்டது.

கிரிக்கெட்

வெற்றி தோல்வி இல்லை

பூனா, டிச. 28

மகாராஷ்டிரா கிரிக்கெட் கோஷ்டிக்கும் இலங்கை கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையே இங்கு 3 நாள் நடைபெற்ற கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது.

கம்போடியா எச்சரிக்கை

நாம்பென், டிச. 28

தென்வியட்நாம்-கம்போடிய எல்லைத் தகராறில் கம்போடியப் பிரஜை எவராவது கொல்லப்பட்டால் அமெரிக்காவுடனான சகல தொடர்புகளும் துண்டிக்கப்பட்டுவிடும் என்று கம்போடிய இளவரசர் தெரிவித்துள்ளார்.

காசோலைகள் மறைகின்றன

மஸ்கேலியா, திங்கள்

மஸ்கேலியாவைச் சேர்ந்த தோட்டத் துரைமார்களும், பிரபல வியாபாரிகளும் தாங்கள் தபால் மூலம் கொழும்புக்கு அனுப்பும் காசோலைகள் உரியவருக்குப் போய் சேருவதில்லை என்று புகார் செய்துள்ளனர். இம் மோசடி பெரும்பாலும் கொழும்புமாநகரிலேயே நடைபெறுவதாக நம்பப்படுகிறது.

மீனவர்கள் இன்றி கரையொதுங்கும் படகுகள்!

வலைகளும் கண்டெடுக்கப்பட்டன

மாவிட்டபுரம், திங்கள்

சூறாவளியின் பிடியில் சிக்குண்டு காணாமல் போயும், விபரம் தெரியாமலும் இருந்த மீன்பிடி உபகரணங்களில் சில இப்பொழுது கிடைத்து வருகின்றன.

நெடுந்தீவில் பன்னிரண்டு மீன்பிடி வள்ளங்கள், மிகச் சேதமடைந்த நிலையில் கரையொதுங்கியுள்ளன. நெடுந்தீவு மாவிலித்துறையில் நீரில் மூழ்கிய வள்ளமொன்று நேற்று இழுத்துச் செல்லப்பட்டு நயினாதீவில் கரை சேர்க்கப்பட்டது.

புயலால் பாதிக்கப்பட்ட வள்ளங்களிலிருந்து வீசப்பட்ட லட்சக்கணக்கான பெறுமதியுடைய வலைகளை, ஆட்களை மீட்கும் பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் ஊர்காவற்றுறைக்கு எடுத்துக்கொண்டு வந்து கரை சேர்த்துள்ளனர். இவ்வலைகளிலிருந்து துர்நாற்றம் வீசுகிறது. இவற்றுக்கு மருந்து தெளிப்பதற்கு மீன்பிடி இலாகா ஏற்பாடு செய்து வருகின்றனர். நெடுந்தீவுக்குத் தெற்கே வெள்ளை என்னும் கடற்பகுதியில் பெருந்தொகையான வலைகள் கடலில் மிதக்கின்றன. இவற்றைக் கரை சேர்ப்பதற்கு போதிய வள்ளங்கள் இல்லாமையால் மீட்பு வேலைகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை.

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சிலர் வலைகளையும், இயந்திரப்படகுகளின் உதிரிப்பாகங்களையும் அதிகாரிகளுக்குத் தெரியாமல் கடத்திவருவதாகக் கூறப்படுகிறது. இதன் காரணமாக ஊர்காவற்றுறை இறங்குதுறையிலும் மற்றும் இடங்களிலும் ஆங்காங்கே குவித்து வைக்கப்பட்டிருக்கும் வலைகளை, அவ்வலைகளின் சொந்தக்காரர்களைக் கண்டுபிடித்து ஒப்படைக்கும்வரை எவரும் அபகரித்து சென்றுவிடா வண்ணம் பாதுகாப்பதில் மீன்பிடி இலாகா உத்தியோகத்தர்களும் பொலிசாரும் ஈடுபட்டுள்ளனர். வலைகளை அபகரிக்க முயற்சிப்போர் மீது கடும் நடவடிக்கை எடுக்கும்படி திரு. துரைரத்தினம் பொலிசாரைக் கேட்டுள்ளார். வலைகளைக் கடத்த சிலர் முயற்சித்ததால், உண்மையான மீன்பிடியாளர்கள் தங்கள் வலைகளையும் கடலிலிருந்து எடுத்துவர முடியாத சங்கட நிலைமை ஏற்பட்டுள்ளது.

பாப்பாண்டவர் அனுதாபம்

வத்திக்கான்நகர், டிச. 28

இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் சூறாவளியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பாப்பரசர் போல் அனுதாபம் தெரிவித்துள்ளார்.

கட்டுப்பணம் செலுத்த தொழிலாளர் முயற்சி

மஸ்கேலியா, திங்கள்

யாழ்ப்பாணம் நல்லூர் தொகுதியில் இலங்கைத் தமிழரசுக்கட்சிப் பிரதிநிதியாகப் போட்டியிடும் இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் தலைவரும், நல்லூர் தொகுதியின் முன்னாள் பாராளுமன்றப் பிரதிநிதியுமான டாக்டர் இ. மு. வி. நாகநாதனின் தேர்தல் கட்டுப்பணத்தை இலங்கைத் தொழிலாளர் கழகத்தைச் சேர்ந்த தலவாக்கொல்லை மாவட்டத் தொழிலாளர்கள் செலுத்த முன்வந்துள்ளனர். அதற்கான நிதி சேகரிக்கும் வேலைகளை தலவாக்கொல்லை பகுதியின் தமிழரசு வாலிபர்கள் செய்துவருகின்றார்கள்.

வாக்காளர் கவலை

மஸ்கேலியா, திங்கள்

மலையகத் தோட்டப்பகுதிகளில் வாழும் வாக்குரிமை பெற்ற பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் அடுத்துவரும் பொதுத்தேர்தலில் யாருக்கு வாக்களிப்பது, எக்கட்சியை ஆதரிப்பது என்ற விபரங்கள் தெரியாமல் கவலை கொண்டுள்ளனர்.

அவர்கள் மத்தியில் திரு. எஸ். தொண்டமான் தலைமையில் இயங்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும், திரு. ஏ. அஸீஸ் தலைமையில் இயங்கும் ஜனநாயகத்தொழிலாளர் காங்கிரஸும், டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் தலைமையில் இயங்கும் இலங்கைத் தொழிலாளர் கழகமும் இன, மொழி அடிப்படையில் இயங்குகின்ற தொழிற்சங்கங்களாகும். இத்தகைய தொழிற்சங்கங்கள் தோட்டப்பகுதியில் உள்ள வாக்காளர்கள் அடுத்தபொதுதேர்தலில் எத்தகைய கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று அறிக்கை வெளியிடாமலிருப்பது அவர்களின் கவலையைப் பன்மடங்காக்குகிறது.

பழுதடைந்த அரிசி விநியோகம்

பளை, திங்கள்

கடந்த மூன்று மாத காலமாக பளைப்பகுதிக்கு அடுத்தடுத்து வெள்ளை அரிசியே விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இவ் அரிசி புழுக்கூடுகட்டிய நிலையிலும் பழுதடைந்த நிலையிலும் விநியோகம் செய்யப்பட்டுவருதலால் மக்கள் இதனைச் சாப்பிட்டு பல நோய்களுக்கு ஆளாகி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சென்ற வருடத்திலும் பார்க்க இவ்வரிசி கூடுதலான பங்கு இவ்வருடம் விநியோகம் செய்யப்படுகிறது. இதுகுறித்து பண்டசாலை அதிகாரிகளிடம் விசாரித்தபோது அரசாங்கம் அனுப்பிய அரிசியையே தாம் விநியோகம் செய்வதாகவும் இன்னும் சில நாட்களுக்கு இவ்வரிசியையே அனுப்ப இருப்பதாக தாம் அறிந்ததாகவும் தெரிவித்தனர்.

சுப்ரீம் கோர்ட்டில் விசாரணை

பருத்தித்துறை, திங்கள்

புலோலி மேற்கு காமாட்சி அம்பாள் ஆலயத்தில் யாழ்ப்பாணம் கரையூரைச் சேர்ந்த குருகுலசமுத்து என்பவரைக் கத்தியால் குத்திக்கொலைசெய்ததாக அவரது மகனான சூசைமுத்து டெனடிக்ட் அல்லது இராசேந்திரம் என்பவர் மீது பருத்தித்துறைப்பொலிசாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் பருத்தித்துறை நீதிபதி திரு. ரூபேர்ட் சில்வா விசாரணையை முடித்து வழக்கைச் சுப்ரீம் கோர்ட்டிற்குப் பாரப்படுத்தினார்.

மட்டுவிலில் திருடர்கள் தொல்லை

சாவகச்சேரி, ஞாயிறு

மட்டுவில் தெற்கில் உள்ள வீடுகளில் இரவில் ஆடு, மாடுகளும், கோழிகளும் திருட்டுப் போவதாகவும், வெளியூர் வாசிகளே இதற்குக் காரணம் என்றும் தெரிகிறது. இதனால் இப்பகுதி மக்கள் பெரிதும் பீதியடைந்துள்ளனர். இது குறித்து பொலிசாரிடமும் புகார்செய்யப்பட்டுள்ளது.

மாணவர் மலர்

புதுவருடக் கதை

கடவுள் கொடுத்த பரிசு

— "கே. ஆர்." —

சிறுவன் ஜோனும் அவனது அம்மா ரோசியும் அந்தப் பெரிய நகரத்தின் வீதிகளிலே பிச்சை எடுத்து அதன்மூலம் ஊசலாடிக்கொண்டிருந்ததமது உயிரைக் காப்பாற்றி வந்தார்கள். இருவருடைய உடலையும் உயிர் மட்டுமே இயங்கி வைத்ததே தவிர, உடல், எலும்பும் தோலுமாகக் காட்சி தந்தது!

மாலை நான்கு மணி —]

அந்த நகரத்து வீதிகளில் நடமாட்டம் என்றுமில்லாதது போல் அளவுக்கு அதிகமாகக் காணப்பட்டது. ஆம்; நாளை மறுதினம் புதுவருடம். ரோசியின் மனதிலே ஒருவித நம்பிக்கை; புதுவருடத்தை தானும் மகனும் கொண்டாடலாம் என்ற நம்பிக்கை அவள் மனத்தில் தோன்றியிருந்தால் அதில் ஆச்சரியமொன்றுமில்லை. அவள் விரும்பியது அன்றிரவு தானும் தனது மகனும் வயிறார உண்ணுவதற்கேற்ற பணம் சேர்த்துவிடலாமென்பதுதான்! ஆனால் — ரோசியும் ஜோனும் சில்லறைக்காக கையை நீட்டிய போது புதுவருடம் பற்றிய சிந்தனையில் இந்த ஏழைகளின் தோற்றம் அவர்கள் கண்களுக்கு தெரியவில்லைப்போலும்

தாயும் மகனுமாகப் பலரிடம் கெஞ்சினார்கள். காலில் விழுந்து பிச்சை கேட்டார்கள், யாருமே கண் திறக்கவுமில்லை; இரங்கவுமில்லை.

நம்பிக்கையை இழந்த ரோசி தன் மகனை அணைத்துக் கொண்டு தனது நிலைமையை எண்ணி அழுது கொண்டே நடந்தாள்! அப்பொழுது — ஜோன் தன் தாயின் பிடியிலிருந்து திமிறிக்கொண்டு நெடுவீதியின் குறுக்கே பாய்ந்தான்! மின்னல் வேகத்தில் தன்பிடியைத் தளர்த்திக் கொண்ட ஜோனின் செயல் ரோசிக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது! அப்படியே அதிர்ந்து போய் நின்று விட்டாள்! அவளுக்கு எதுவும் புரியவில்லை.

நெடுவீதியிலே ஒரு லொறி மிகவும் வேகமாக ஓடிக்கொண்டு வந்தது. அப்போது ஒரு நான்கு வயதுக் குழந்தை வீதியின் நடுவழியாக வந்துகொண்டிருந்தது. அந்தக் குழந்தையை ஜோன் பாய்ந்து விழுந்து லொறி என்ற யமனிடம் இருந்து மீட்டான். அடுத்தகணம்! "மேரி, மேரி..." என்று கத்திய வண்ணமே பெரியவர் ஒருவர் அங்கே வந்தார். ஜோன் லொறியிடமிருந்து மீட்ட அந்தக் குழந்தையின் தந்தைதான் அவர்! ஜோன் அவரது குழந்தையைக் காப்பாற்றியதைத் தூரத்திலிருந்து அவர் கண்டதோடு, அவ்விடத்துக்கு அவர் வந்ததும் தனது கவலையீனத்தை சுட்டிக்காட்டிப் பேசினார். பெரியவர் தன் குழந்தையின் உயிரைக் காப்பாற்றிய ஜோனை அப்படியே அணைத்துக் கொண்டார். ஜோனையும் அவனது தாயையும் கண்ட அவர் அவர்களது ஏழ்மை நிலையைப் புரிந்து கொண்டார். அவர்களைத் தமது வீட்டிற்கே அழைத்துச் சென்றார். தமது குடும்பத்தோடு அவர்களையும் ஒருவராகச் சேர்க்கும் எண்ணத்தோடு! உயிர்த்தியாகம் செய்ய முனைந்த நன்றிக்கா! விடிந்தது!

அன்று புதுவருடம். ரோசியும் அவள் மகனும் அந்தப் பெரியவர் வீட்டில் புது உடை அணிந்து மிகவும் உற்சாகத்துடன் புதுவருடத்தைக் கொண்டாடினார்கள். இறைவன் அவர்களை தனியாக விட்டுவைக்கவில்லை.

கிறிஸ்மஸ் நாடகம்

புனித இரவு

— எம். எஸ். கலா —

(சென்ற வாரத் தொடர்ச்சி)
காட்சி: 2

இடம்: பெத்லேம் நகர்-மாட்டுத் தொழுவக் குகை.

[சூசையப்புவும் மரியாயும் பெத்லேம் நகர் வீதியெல்லாம் அலைந்தும் ஒரு சிறு குடிசை கூடக் கிடைக்காமல் சோர்வுடன் நகரின் சேரிப்புறத்தில் உள்ள ஒரு குன்றின் குகை முன் வந்து]

சூசையப்பு: மரி!...... இந்தப் பெரிய பெத்லேம் நகரில் ஒரு குடிசை கூடக் கிடைக்கவில்லையே... ஆண்டவனே...! பகல் இரவென்று பாராமல் ஐந்து நாளாகக் கஷ்டப்பட்டு நடந்துவந்தோம். கடைசியாக இந்தப் பாழும் குகையிலா வாழவேண்டும்......

மரியாய்: கவலைப்படாதீர்கள்...... இந்தப் பரந்த உலகிலே எவருக்கு எது சொந்தம்?...... அரசன் ஆண்டியாவான். ஆண்டி அரசனுவான்... இதுதான் மனித வாழ்வு...... பரந்த மனமும் சிறந்த குணமும் இருந்தால் இந்த பாழும் குகையும் பரலோகமாகத்தான் இருக்கும்......

சூசை: உண்மைதான் மரி... எல்லாம் வல்ல தேவனின் சித்தப்படியே நடக்கும்.

மரி: இந்த மலைக்குகை எங்களுக்கு மட்டுமல்ல. இந்தக் காளைகளுக்குக்கூட உறைவிடமாக இருக்கிறது பார்த்தீர்களா?

சூசை: மரி!...... நீ நெடுந்தூரம் பிரயாணம் செய்து களைத்தே போய்விட்டாய்...... சற்று அப்படிப் படுத்து ஓய்வு எடுத்துக்கொள் மரி......

[பேய்க் காற்றும் மழையும் 'சோ' என்று கொட்டுகிறது...... இடி மின்னல்...... அவைகளின் அலறல் சத்தம். அச் சமயத்தில் சந்திர சூரியனைப் பழிக்கும் வண்ணம் நம் தேவகுமாரன் ஜனனமாயினர் அவர் அழும் குரல் தேவகானம் இசைப்பது போல இருந்தது, வான் நட்சத்திரம் முளைத்துவிட்டது சிறிது நேரத்தில்]

மரி: ஆ! இந்த தேவபாலனா என் வயிற்றில் பிறந்தான். நாம் பெரும் பாக்கியசாலிகள் தான். ஐயோ!... இந்த உலகத்தை ஆளும் வல்லவர் பனியிலும் குளிரிலும் நடுஇரவு நேரத்தில் இந்த மலைக்குகையின் மாட்டுச் சதுக்கத்தில் பிறந்துள்ளார். என் பாலன் எவ்வளவு பொறுமைசாலி... எவ்வளவு எளியவர் பார்த்தீர்களா?......

சூசை: ஆம் மரி... அவர் பார்வையிலே எமக்கு ஒரு தெளிவுண்டாகிறது... ஞானச் சுடரொளி வீசுகிறதே அவர் கண்கள். இனி இந்த உலகுக்கே ஒளியாகத் திகழ்வார் நம்பாலன்......

[தேவபாலன் ஒரு வைக்கோல் தொட்டியில் கிடத்தப்பட்டுள்ளார். மரியாயும் சூசையப்பும் தெரிசித்தவண்ணம் முழந்தாழ் இட்டு இருக்கிறார்கள். காளை மாடுகள் ஆண்டவருக்குத் தங்கள் பணியைச் செய்கின்றன சம்மனசானவருடன் இடைச் சிறுவர் வரல்]

சம்மனசு: ஓ!...... இதோ நான் சொன்னது போல் தேவபாலன் முன்னிருட்டில் பிறந்திருக்கிறார்...... அவருக்கு நாம் ஸ்தோத்திரம் சொல்லித் துதிப்போம் வாரீர்......

இடைச்சிறுவன்: நண்பர்களே! எங்கள் இரட்சகரின் மகிமையைப் பார்த்தீர்களா? நாமெல்லாம் வாழ்விலே கஷ்டப்படுகிறோம் என்று கவலைப்பட்டு வந்தோம். இந்த உலகத்தையே ஆளும் வல்லமை பொருந்திய சிறுபாலகன் மெசையாவுக்குச் செல்வ சுகபோகங்கள் இல்லையே...... அவரைப் போல நாமும் இவ்வுலக அற்ப ஆசைகளை வெறுத்து பாலன் பிறந்த இப்புனித தினத்தை சிரித்து மகிழ்ந்து கொண்டாடுவோம், வாரீர். சுவாமி பிறந்த இரவை வாழ்த்துவோம்.

[இடைச்சிறுவர்கள் பாலனை வாழ்த்தி இனிய பாட்டுகள் பாடி ஆடி ஓடி மகிழ்கிறார்கள்.]

திரை

(முற்றும்)

காப்பியடிப்பதிலும் கவனம் வேண்டும்

இரு வாரங்களுக்கு முன்னர் "மாணவர் மலரில்" வெளியான ஒரு கட்டுரை, இந்திய வார சஞ்சிகை ஒன்றிலிருந்து "திருடப்பட்டு" எழுதப்பட்டிருப்பதாகவும் அந்தக் கட்டுரையை பெயர்பெற்ற தமிழ் அறிஞர் ஒருவர் எழுதியிருக்கார் என்றும் குருநகரிலுள்ள கடற்கரை வீதியைச் சேர்ந்த அ. யேசுராசா என்பவர் குறை கூறி எழுதியுள்ளார். கட்டுரைகளை இப்படியாகத் திருடி எழுதுவதால் எழுத்துலக வாழ்வில் முன்னேற்றம் இருக்காது என்றும் அவர் தெரிவித்துள்ளார். குறையைக் கண்டு பிடித்து [illegible]ற்காக இவருக்கு "மாணவர் மலர்" நன்றி தெரிவிக்கிறது.

குறிப்பிட்ட அந்தக் கட்டுரை பல நல்ல விஷயங்களைக் கொண்டிருந்தது. அதன் காரணமாகத்தான் அந்தக் கட்டுரை இங்கு முக்கியமாகப் பிரசுரிக்கப்பட்டிருந்தது. வேறு தமிழ் அறிஞர்கள் அல்லது பெரியவர்கள் எழுதும் கட்டுரைகளை மற்றவர்களும் படித்து பயன்பெறுவதற்காக மாணவர் பலருக்கு அனுப்பலாம். ஆனால் குறிப்பிட்ட விஷயத்தை யார் எழுதினார் என்பதை எழுத வேண்டியது மிகவும் முக்கியமாகும். குறிப்பிட்ட அந்தக் கட்டுரையை எழுதியவரும் மற்றவர்களும் அதனைக் கருத்தில் கொள்ள வேண்டும்

—"மலர்"

விஞ்ஞானம் என்றால் என்ன?

அடுத்தவாரம் முதல் வெளியாகும்

விஞ்ஞானம் என்றால் என்ன? அது நவீன உலகத்தின் படைப்பாகும் என்று பல அறிஞர்கள் கூறினார்கள். ஆனால் இந்தக் கூற்று முற்றிலும் தவறானது என்று இரு விஞ்ஞான பேராசிரியர்கள் தெளிவாக விளக்குகின்றனர். தற்கால விஞ்ஞானம் முற்காலத்திலேயே தோன்றியது என்று இவர்கள் கூறுகின்றனர். கிறிஸ்துநாதர் பிறப்பதற்கு முன்னர் நடைபெற்ற சம்பவத்தை ஆதாரமாக எடுத்துக்காட்டி, எது விஞ்ஞானம் என்பதை இந்தப் பேராசிரியர்கள் விளக்குகின்றனர்.

பண்டைய விஞ்ஞானத்துக்கும் இன்றைய விஞ்ஞானத்துக்கும் முக்கியமான வேற்றுமைகள் இல்லை என்று இடித்து இடித்துக் கூறும் இந்தப் பேராசிரியர்களின் விளக்கங்களை அமெரிக்காவைச்சேர்ந்த ரூபர்ட் ஸ்டீவன்ஸன் என்பவர் இங்கு விபரமாக வெளியிடுகிறார். அவரின் கட்டுரைத்தொடர் அடுத்தவாரம் முதல் மாணவர் மலரில் வெளிவருகிறது. இந்த அறிவுச் செல்வத்தைப் பகிர்ந்துகொள்ள அடுத்தவார இதழை (5-1-65) படியுங்கள்.

புதுவருட விருந்து

குடை செய்த சதி

—எ. இருதயதாஸ்—

புதுவருடக் கொண்டாட்டத்தைச் சிறப்பாக நடத்த வேண்டும் என்று விரும்பிய அருளப்பு அவசரமாக சைக்கிளில் எங்கேயோ சென்று கொண்டிருந்தார். அவருடைய சைக்கிளுக்கு நம்பர் பிளேட் இல்லை ஆதலால்சற்றுபொலிஸ்காரனுக்குப் பயத்தோடு ஓடிக்கொண்டிருந்தார். அவரது கமக்கட்டுக்குள் குடையைச் சுருக்கிவைத்தபடி ஓடிக்கொண்டிருந்தார். அப்போது ஒரு குள்ளமான பொலிஸ்காரன் சந்தியில் நின்றுகொண்டிருந்தான். பொலிஸைக் கண்டதும் அருளப்புவின் இருதயம் ஒருதரம் நின்று பின்னர் வேலை செய்தது. மறிக்கப்போகிறானே என்ற பயத்தில் அவனருகில் வந்ததும் வேகமாகச்சைக்கிளை செலுத்தினார். சைக்கிள் அவனைக் கடந்து சிறிது தூரம் போனதும் அவன் "ஏ! ஏ! லே" என்று கூக்குரலிட்டான். அருளப்பு தன்னை நம்பர் பிளேட் இல்லாததற்காக பிடிக்கப்போகிறான் என நினைத்து வேகமாய் செலுத்தினார். அவனும் அவர் பின்னால் ஓடிக்கொண்டிருந்தான், அருளப்புவா நிற்பார்? குடுமி அவிழ அவிழ சைக்கிளை வேகமாய் ஓடி பல சந்து பொந்துகளிலும் நுழைந்து ஒருமாதிரி பொலிஸ்காரனிடமிருந்து தப்பிவிட்டார். அப்போது மழை தூறவே, அவர் குடையை விரிப்பதற்காக கமக்கட்டிலிருந்து அதை எடுத்தார். மறுகணம் அவருக்குச் சிரிப்பு வந்தது. அவரது குடைப்பிடியில் பொலிஸ்காரன் தொப்பி தொங்கியபடியிருந்தது! பொலிஸ்காரன் துரத்தியது தொப்பிக்குத்தான்.

கிறிஸ்துவின் பொன்மொழிகள்

நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்; என்னையல்லாமல் ஒருவனும் பிதாவின் இடத்தில் வரான்.

●

ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு நான் உன்னை விடுவிப்பேன். நீ என்னை மகிமைப்படுத்துவாய்.

●

வருத்தப்பட்டுப் பாரம் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்,

●

எவனுடைய மீறுதல் மன்னிக்கப்பட்டதோ! எவனுடைய பாவம் மூடப்பட்டதோ அவன் பாக்கியவான்.

●

நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன். என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொண்டு, என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது உங்கள் ஆத்மாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்.

●

ஒருவர் பாரத்தை ஒருவர் சுமவுங்கள்.

●

உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று நீங்கள் அறியும்படி இவைகளை (தேவவாக்கியங்களை) எழுதி இருக்கிறேன்.

தொகுப்பு: இரா. தர்மலிங்கம், குருநாக்கலை.

ஊர்காவற்றுறை றேஞ்சஸ் வெற்றி

ஊர்காவற்றுறை ஞாயிறு ஊர்காவற்றுறை "றேஞ்செஸ்" கோஷ்டிக்கும், ஊர்காவற்றுறை 'யுனைடெட்' கோஷ்டிக்குமிடையே ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டத்தில் 'றேஞ்செஸ்' கோஷ்டி 2–0 கோல்களால் வெற்றியீட்டியது. இரு தரப்பினரும் திறமையாக விளையாடியும் ஈற்றில் 'றேஞ்செஸ்' கோஷ்டியினர் வெற்றியைத் தமதாக்கிக்கொண்டனர்.

ஆசிரியர் திரு ஏ இ. இரத்தினராசா மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்

ஆலய பரிபாலன நிர்வாகக்குழு

பருத்தித்துறை, திங்கள் நாகர்கோவில் நாகர் தம்பிரான் ஆலய பரிபாலனம் சம்பந்தமாக நடைபெற்ற வழக்கில் மாவட்ட நீதிபதியின் சமரச ஏற்பாட்டிற்கமைய நிர்வாகக் குழுவொன்றைத்தெரிவு செய்வதற்கான பொதுக்கூட்டம் வடமராட்சி காரியாதிகாரி திரு. ஜே. டி. ஆர்னல்ட் தலைமையில் நடைபெற்றது.

கணபதிப்பிள்ளை கந்தையா, கந்தையா செல்வநாயகம், முருகேசு கதிர்காமு, கணபதிப்பிள்ளை சிவகாமி, அப்புட்டி வெற்றிவேலு ஆகியோர் நிர்வாகக் குழுவினராகத் தெரிவு செய்யப்பட்டனர்.

யு. என். பி. கிளை நிர்வாகிகள்

பருத்தித்துறை, திங்கள் ஐக்கியதேசியக் கட்சியின் வடமராட்சிக் கிளையின் வருடாந்தக் கூட்டம் கிளைத் தலைவர் திரு. எஸ். சபாபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

தலைவராக திரு. எஸ். சபாபதிப்பிள்ளையும், உபதலைவராக திரு. எஸ். கணபதிப்பிள்ளையும், இணைச்செயலாளர்களாக திரு த. பத்மநாதன், திரு. ஏ. வீரவாகு ஆகியோரும் தனாதிகாரியாக திரு. எஸ். இரத்தினசபாபதியும் தெரிவுசெய்யப்பட்டனர்.

"அறிவு பெருகியபோதிலும் உணர்வு அருகுகிறது"

சைவத்திருநெறி விழாவில் பேச்சு

யாழ்ப்பாணம், செவ்.

"விஞ்ஞானம் வளர்ந்து செல்லும் இந்தக் காலத்தில் அறிவு வளர்ந்துள்ளது. வளர்கின்றது என்பது உண்மைதான் ஆனால் அறிவை தக்க முறையில் பயன்படுத்தக்கூடியதாக மக்களிடையே உணர்வு ஏற்படவில்லை. அது அருகி வருகிறது. இதுவே இன்றைய சமுதாயத்தின் இக்கட்டான நிலைக்குக்காரணமாகும்" என்று வட்டு-சிவன் இந்துசமய அபிவிருத்திச் சங்கத்தினர் ஆதரவில் நடைபெற்ற சைவத்திருநெறிவிழா இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளில்கலந்து கொண்டு உரையாற்றிய பிரம்மஸ்ரீ ஆ. பாலசுந்தரக்குருக்கள் குறிப்பிட்டார்.

வட்டுக்கோட்டை சிவன் கோவில் மேலை வீதியில் அமைந்த 'புலவர் சேது பேரன்' அரங்கில் நடைபெற்ற இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளுக்கு முன்னாள் மாவட்ட நீதிபதி திரு. செ. தனபாலசிங்கம் தலைமைவகித்தார். அவர் தமது உரையில் குறிப்பிட்டதாவது:-

"சைவசமயத்தில் மட்டுமே வாழ்க்கையுடன் சமயம் ஒன்றியிருப்பதைக் காணமுடிகிறது. ஆங்கிலேயர் ஆட்சியில் சைவசமயத்தை அடக்கி ஒடுக்க பல முயற்சிகள் செய்யப்பட்டன. அப்படியிருக்க சைவம் இங்கு வாழ்ந்து வந்தது. இப்பொழுது வளர்ந்து வருகிறது. முந்திய அடக்குமுயற்சிக்கும் அதேநிலை இப்பொழுதும் தலைதூக்கிவருகின்றது. இந்த அபாயத்திலிருந்து விடுபடுவதற்கு சைவசமயம் வாழுவதற்கு ஒரேவழி தமிழர் தலைமைபீடத்தில் இருக்கவேண்டியது அவசியம்".

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

சைவத்துக்கும் பெண்களுக்கும் வேறெந்தச் சமயத்திலும் இல்லாத முறையில் அதிக தொடர்புண்டு. சைவம் என்றால் அன்பு அன்பு பாலிக்கும் தன்மையை இயல்பாக உடையவர்கள் பெண்கள். இதனாலேயே சைவத்தில் பெண்களுக்கு சிறப்பு இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. காரைக்காலம்மையார். திலகவதியார், மங்கையர்க்கரசியார் போன்ற பெண்மணிகள் சைவத்தைக் கட்டிக்காத்து வளர்த்து பெண்களின் சிறப்பை மேலும் உயர்த்தியுள்ளார்கள்.

திரு. கே. பி. ஹரன் பேசுகையில், தனக்குள்ளே ஈசன் இருக்கின்றார், என்று நினைத்து அவனின் சக்தியை உணர்ந்து தொண்டு செய்பவர்களிடம் ஈசன் தானுவே நண்ணுவான் என்றும். வெறும் பெயருக்கும் புகழுக்குமாக இறைவனை வழிபடுவதைவிட அவன் பெருமையை உணர்ந்து அவனை நினைத்து நல்ல தொண்டுசெய்வதேமேலானது என்றும் குறிப்பிட்டார்.

வட்டுக்கோட்டை முன்னாள் எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில், "பண்டைய சரித்திரப் பிரசித்தி பெற்ற சைவ ஆலயங்களை எல்லாம் பௌத்தமத புனித நகரமாக்க முயற்சிக்கும் ஆபத்தான சூழ்நிலை தோன்றியுள்ளது, சைவமும் தமிழும் பிரிக்க முடியாதவை. அவை இரண்டுக்கும் ஆபத்தானநிலை ஏற்பட்டிருக்கும் இந்த நேரத்தில நாம் விழிப்புணர்ச்சியுடன் இருக்கவேண்டும்" என்று குறிப்பிட்டார்.

பிரம்மஸ்ரீ இ பாலசுப்பிரமணிய ஐயர் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் திரு. மு. சிவானந்தமும், புலவர் நா. சிவபாதசுந்தரமும் கலந்துகொண்டார்கள்.

சங்கஆதரவில் நடத்தப்பட்ட இயல், இசை, கட்டுரைப் போட்டிகளில் பரிசு பெற்றவர்களுக்கு வைத்தியாச்சாரிய திரு. அ. க. குமாரசாமி பரிசில்கள் வழங்கினர்.

இசை. பரதநாட்டியம், கதம்ப இசையுரை, நாட்டுக்கூத்து முதலிய கலைநிகழ்ச்சிகளும் விழாவில் இடம்பெற்றன.

விழாவின் முதல்நாள் நிகழ்ச்சிகள் 'முது தமிழ்ப் புலவர் நல்லதம்பி அரங்கில்" சைவக் காவலர் திரு த. முத்துசாமிப்பிள்ளை தலைமையில் சென்ற ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது அன்றைய தினமும் பல அறிஞரின் சொற்பொழிவுகளும், இசை, நடன நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன

ராஜா சினிமா
(சுழிபுரம்)
கல்யாணகுமார்-தேவிகா
நடிக்கும்
நெஞ்சில் ஓர் ஆலயம்

REGAL — JAFFNA
NOW SHOWING
Kerwin Mathews
in
THE PIRATES
OF
BLOOD RIVER
(Eastman color)

ஸ்ரீ மனோகரா
(யாழ்ப்பாணம்) போன் 483
மனோகர்-பண்டரிபாய்
நடிக்க
புனிதவதி

இப்பொழுது திரையிடப்படுகிறது!
கிங்ஸ்லி — பிளாஸா
(கொழும்பு) (வெள்ளவத்தை)
மற்றும் 4 திரைகளில்
நடிகர்திலகம்
சிவாஜிகணேசன்
கொடைவள்ளல் கர்ணனுக நடிக்கும்
பத்மினி பிக்சர்ஸ்
கர்ணன்

5-வது மகத்தான வாரம்!
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தீந்தமிழால் இறைவனைப் பாடி, தெவிட்டாத
பிரபல பின்னணி பாடகர்
டி. எம். சௌந்தரராஜன்
நடிக்கும்
பட்டினத்தார்
சங்கீதம்: ஜி. ராமநாதன் — டைரக்ஷன் கே. சோமு

வேலைவேண்டுவோர் கழகம்

உடுப்பிட்டி, திங்கள்

"அரசியல்வாதிகள் வேலையில்லாதவர்களைத் தமது கைப்பொம்மைகளாக்கப் பார்க்கின்றார்கள். அவர்களின் சுயநல வேட்டைக்குப் பலியாகாமல் இருப்பதுடன் அரசாங்கத்திற்கும் வேலையில்லாதவர்கள் பற்றிய விழிப்புணர்ச்சியை அடிக்கடி ஏற்படுத்தவேண்டும். இதுகாலவரையில் வேலையில்லாதவர்களைப்பற்றியும் தொழிற் காரியாலயமும் அரசாங்கத்திற்கும் தொழில் மந்திரிக்கும் புள்ளிவிபரம் சேர்க்கும் ஒரு ஸ்தாபனமாக இயங்கியுள்ளதே தவிர வேலையில்லாத தொகையினரில் ஒரு வீதத்தினருக்காவது வேலை வாங்கிக் கொடுத்ததாக இல்லை."

இவ்வாறு ஆத்தியடியில் அகில இலங்கை வேலை வேண்டுவோர் கழகத்தை அங்குரார்ப்பணஞ் செய்துவைத்த திரு கே. ரி. இராசசிங்கம் பேசுகையில் கூறினர்.

இந்தச் சங்கத்தின் நிர்வாகிகளாகப் பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்- திரு. கே. ரி இராசசிங்கம், செயலாளர்- திரு. நா. செல்வராசா, பொருளாளர்- திரு. வி.ராமநாதன்.

யாத்திரை ஆரம்பம்

மன்கேணியா, திங்கள்

இம் மாதம் 18-ம் திகதி பௌர்ணமி தினத்தன்று சிவனொளி பாதமலை யாத்திரை காலம் ஆரம்பமாயிற்று

அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் அட்டனிலிருந்து புகையிரத—பஸ் தொடர்புசேவை ஆரம்பமாகும்

விறகு காலையில் விறகில்லை

யாழ்ப்பாணம், திங்கள்

சில வாரங்களாக சங்கானை அரசாங்க விறகுகாலையில் விற்பனைக்கு விறகு இல்லாததால் அவ்வூர் மக்கள் மிகவும் கஷ்டத்துக்குள்ளாகியிருக்கின்றார்கள் இதுசம்பந்தமாக தனிப்பட்ட முறையில் பலர் காட்டுக்கந்தோர் அதிகாரிகளுக்கு முறையீடு செய்தும் எதுவித மான பயனும்கிடைக்கவில்லையாம்.

தலைவருக்கு விருந்துபசாரம்

காங்கேசன்துறை, திங்கள்

காங்கேசன்துறை பட்டின சபைத் தலைவராக கடந்த இரண்டாண்டு காலமாகக் கடமையாற்றிய திரு. மு. திட வீரசிங்கம் தமது தலைவர் பதவியை ராஜினுமாச் செய்ததையிட்டு காங்கேசன்துறைப் பட்டினசபை அங்கத்தனர்களும் ஊழியர்களும் பிரிவு உபசாரமளித்துக் கௌரவித்தனர்.

உபதலைவர் திரு க. கிருபாமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு. பரமநாதன், திரு. மயில்வாகனம், திரு கந்தரலிங்கம் ஆகியோர் உரைநிகழ்த்தினர்.

"என்னுடன்வந்த நால்வரும் என்கண்முன்னே மூழ்கினர்"

சூறவளி கொடுமையால் நடுக்கடலில் தத்தளித்த மீனவரின் சோகக்கதை

யாழ்ப்பாணம், செவ்வாய்

வாடிய முகம். வறண்ட தேகம். எண்ணெயற்று ஏங்கும் தலைமயிர். கண்கள் இரண்டும் தாழ்ந்து இரத்தம் போன்று காட்சியளிக்கும் கோலம். இவற்றுடன்படகுடன் மோதப்பட்டு அதனால் நெற்றியிலும்-முகத்திலும் பல காயங்களுடன் காணப்படும ஒருவர் கடந்த செவ்வாய்க்கிழமை நயினுதீவிலிருந்து இயந்திரப்படகு ஒன்றில் மீன்பிடிக்கச் சென்று தனது சகபாடிகளான நால்வரையும் படகையும் இழந்து அவர் மட்டும் இன்று உயிருடன் தனது சோகக்கதையைக் கூற இருக்கின்றார் என்றால் அது ஆச்சரியப்படக்கூடியதோர் விஷயம்தான் அவர்தான் குருநகரைச் சேர்ந்த மணி. அவருக்கு வயது 20 இருக்கும்!

மணியும் அவருடைய நண்பர்களான கறுப்பையா-யேசுதாசன்-அலோசியஸ்- இராசமணி ஆகியோரும் நயினுதீவிலிருந்து தொழிலுக்குப் புறப்படுவது வழக்கம். அலோசியஸ்-சமணி தவிர்ந்த மற்றவர்கள் எல்லோரும் குடும்பஸ்தர்கள். ஒருவருக்கு விவாகமாகி இருமாதங்களாம். நயினுதீவில் இருந்து புறப்பட்ட இந்தக் கோஷ்டியினர் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 8 மணியளவில் புயலின் வேகத்தை உணர்ந்தனர் படகைத் தாங்கள் எண்ணிய திசைக்குப் போகவிடாது புயலும் காற்றும தடுத்து வேறுபக்கமாகத் தள்ளிக்கொண்டு சென்றது அத்துடன் கடல் அலையும் படகிற்கு மேலாகப் பாய்ந்து செல்லத் தொடங்கியது. எல்லோரும் படகை இறுகப் பிடித்துக்கொண்டனர்.

சரியாக காலை நாலு மணியளவில் படகு புரண்டு திரும்பவும் முந்திய நிலைக்கு வந்துவிட்டது. புயல் காற்றினை காரணமாக படகை ஒருவராலும் சரியாகச் செலுத்த முடியவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் உயிருக்கு மீட்சியில்லை என்று எண்ணியவரும், நீந்தத் தெரியாதவருமான மணி என்பவர் தன்னைப் படகுடன் சேர்த்து ஒரு கயிற்றுல் இறுகக் கட்டிக்கொண்டார். எல்லோரும் ஓரேகூக்குரல் இட்டனர் ஆனால் காலன் காற்றுடன் சேர்ந்து அவர்களை அழிக்கமுற்பட்டான். நீந்தக்கூடியவர்கள் நீந்தலாம் என்று எண்ணிக்கடலை மனதிற்கொண்டனர், "சோ" என்ற புயலின் பேரிரைச்சல் கேட்கும் சமயத்தில் எல்லாம் அவர்கள் இருதயம் செய்வதறியாது திகைத்தது வாய்பேச மறுத்தது. புயலின் வேகம் வரவரகூடிக்கொண்டேசென்றது அலைகளின் அடி உயர்ந்தே சென்றது படகு தள்ளாடத்தொடங்கியது. சரிந்தது. பின்னர் புரண்டது. அவ்வளவுதான் மணியுடன் சென்ற நால்வரும் அலையினால் அடிபட்டு கடலுடன் சென்றுவிட்டார்கள். அப்பொழுது அவர்கள் குறை உயிருடன் தான் சென்றுர்களாம்.

படகும் தாண்டுவிட்டது. ஆனால் இயந்திரப் பக்கத்தின் ஒரு பகுதி தாண்டதன் காரணமாகமறுபக்கம்மேல் உயர்ந்து நின்றது. இந்தப்பகுதியில் தன் உயிர்தப்பியமணி கயிற்றினுல் கட்டப்பட்டிருந்தார். அறிவற்ற நிலையில் அவர் இருந்தார். புதன்கிழமை பகல் 12 மணியளவில் மீனவர்களை தேடுவதற்காகச் சென்றபடகு ஒன்றினுல் மணி கண்டுபிடிக்கப்பட்டு மீட்கப்பட்டார்.

படகில் மணி ஏற்றப்பட்டதும் அறிவற்றநிலையில் காணப்பட்டு, வைத்திய சிகிச்சை அளிப்பதற்காக ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அங்கேசிலமணிநேரம் சிகிச்சை பெற்ற பின்னர் அறிவுபெற்று தற்பொழுது இந்தச்சோகக்கதையை "ஈழநாடு"க்கு கூறியிருக்கின்றார். நயினுதீவிலிருந்து மூன்றரை மைல்களுக்கப்பால் நடைபெற்ற இந்தகோர சம்பவத்தில் எஸ். ஐ. சி. 7 என்ற, சலமன் மரியாம்பிள்ளைக்கு சொந்தமான ரூபா 30,000 பெறுமதியான படகு சுக்குநூருகியது. மற்றைய நாலு மீனவர்களின் சடலங்களும் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை, "நான் தப்பமாட்டேன் என்று தான் நினைத்தேன். ஆனல் ஏதோ விதமாகத்தப்பிவிட்டேன்" என்று கண்கலங்க எமது நிருபரிடம் திரு மணி தெரிவித்தார்.

ஜாப். பிரதமருக்கு சுகர்ணோ அழைப்பு

டோக்கியோ, டிச. 28

ஜப்பான் பிரதமர் திரு. ஸாட்டோ, ஜனதிபதி சுகர்ணோவின் அழைப்பிற்கிணங்க இந்தோனேஷியாவுக்கு விஜயம் செய்யவிருக்கிருர்.

வரி விளம்பரம்

விற்பனைக்கு
AC மோட்டர் 20 குதிரை சக்திகொண்டது விற்பனைக்குண்டு தொடர்புகொள்ளவும். ஜயசோதரா, கல்உடைக்கும் தொழிற்சாலை, பலாலி வீதி, கோண்டாவில். 1367

A/40 விற்பனவு
நல்ல நிலைமையிலுள்ள CL 7700 தொடர் இலக்க முன்ன கார் விற்பனவுக்குண்டு. 11, வைமன்வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். 1863

மேலான உயிர்க் கருணை!
உலகில் யாவர்க்கும் பொது!!
எவரும் புண்ணியப் பசுவையோடு "கைகூப்பித் தொழும்" உலகை தமிழர் மகாதேசியமாகும்!!!
இம்மலர்வில், புண்ணியவான்கள் — புண்ணியவான்களை, எல்லாத் தொகுதிகளிலும் போட்டியின்றி, ஒவ்வொரு தக்கவரை அனுப்பினல் மகா பாராளுமன்றத்தின் — தருமதேவியும் உலக உள்ளமும் குளிர்ந்து ஆசீர்வதிக்கும்! இது இன்று பிரார்த்தனை நூலாகாதா? சன்மார்க்க தவக்கூடம் கந்தரோடை. 1374

தொய்வு, நீரிழிவு
குணப்படுத்த உத்தரவாதம், மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய சுற்ற லோக் இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50. நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.
வைத்தியர் பரிபூரணநந்தர் கைலாயபிள்ளையார்கோவிலடி, யாழ்ப்பாணம்.

மரண அறிவித்தல்

கதிரவேற் குருக்கள்

கடந்த வியாழக்கிழமை எமது அருமைத் தந்தையும், மாதகல் அரசொல்லை விநாயகர் மாணுவெட்டி அம்மன் கோயில் ஆதீன குருவும், கிரியாவிற்பன்னருமாகிய சிவாசார்யசிகாமணி சிவஸ்ரீ. செ. கு. கதிரவேற் குருக்கள் சிவபதம் அடைந்துவிட்டார். உற்றுரும், உறவினர்களும், அன்பர்களும் தயவுசெய்து இத தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

க. செல்லப்பா குரு, க. சிவசுப்பிரமணிய குரு, க தர்மலிங்கசர்மா. 1373

குடியேற்றப் பகுதிகளில் ஏற்பட்ட சேதங்கள்

ஓமந்தை, திங்கள்

அண்மையில் வீசிய சூறாவளியினால் பாதிக்கப்பட்ட இடமான சேமடுக்குளம் குடியேற்றத் திட்டத்தில் மொத்தம் 200 வீடுகளில் 269 வீடுகளின் கூரைகள், கூரைத்தகரங்கள் இருந்த இடங்களில் இருந்து 300 யார் தூரத்திற்கு தூக்கி வீசப்பட்டன. 31 வீடுகள் தான் தெய்வாதீனமாக காப்பாற்றப்பட்டுள்ளது. 31 வீடுகளிலும் 169 வீட்டார்களும் தஞ்சம் புகுந்துள்ளார்கள். கால்நடைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. அரசாங்கம் கூப்பன் ஒன்றுக்கு 2 படி அரிசி வீதமும் கால் ரூத்தல் சீனி, 1 அவுன்ச பருப்பு முதலியனவும் இலவசமாக விநியோகித்து வருகிறது.

கொச்சிக்குளம், மாளிகை கிராமங்களில் உள்ள வீடுகள் கடும் சேதத்திற்குள்ளாகவில்லை. தோட்டப் பயிர்கள் பயன்தரும்மரங்கள் அடியோடு அழிந்துவிட்டன.

ஆறுமுகத்தான் புதுக்குளம், பெரிய புளியங்குளத்தில் சில வீடுகள் இடிந்து விழுந்துள்ளன. உயிர்ச்சேதம் இல்லை.

மரையடித்தகுளம், பண்டிக்கெய்தகுளம் கிராமங்களில் உள்ள வீடுகளும் கடும் சேதத்துக்குள்ளாகவில்லை.

நான்கு நாட்களாக தபால் விநியோகம் இல்லை. குளத்து நீர் மடத்திற்கு வந்துள்ளது. இறம்பைக்குளம், மகிழங்குளம் முதலிய கிராமங்களுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது.

ஓமந்தையில் அரிசி ஆலைகளுக்கு அதிக சேதமேற்பட்டுள்ளது. ஓமந்தை கடைவீதிகளில் சில கடைகள் பெரும் சேதத்திற்குள்ளாயின.

சின்னக்குளம், மருதங்குளம் கிராமங்கள் அதிகசேதத்திற்குள்ளாகவில்லை. மருதோடை, நாம்பன்குளம், அலைகல்லுமோர் குளம் கிராமங்களில் அதிக சேதம் இல்லை. சிலர் வீடுகளை இழந்துள்ளார்கள். பாதை துண்டிக்கப்பட்டுள்ளது. நாவற்குளம், அரசன்குளம் கிராமங்களும் அதிகம் பாதிக்கப்படவில்லை. மேற்படி கிராமங்களில் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை. எல்லா கிராம அகதிகளுக்கும் பங்கீட்டு அரிசி இலவசமாக வழங்கப்பட்டது.

நாம்பென், டிச. 28

புதிய சோவியத் தலைவர்கள் தமது நாட்டின் மீது இருந்த ஆதரவு கொண்டுள்ளனர் என்றும் அவர்களுடனான உறவுகள் விருத்தியடைந்திருப்பதாகவும் கம்போடிய இளவரசர் அறிவித்துள்ளார்.

6 மாதம் திருமலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சமீபத்தில் புயலினால் பாதிக்கப்பட்ட அகதிகளுக்கு சகல உதவிகளும் புரியுமாறு ராணுவப்படைகள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

நிலைமையை அமுலுக்குக் கொண்டுவர எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருப்பதாக நிரந்தரக் காரியதரிசி திரு. கோபன் விக்ரம தெரிவித்தார். ஏற்கனவே தபால், மின்சாரம், மராமத்து அதிகாரிகள் வடக்கிலும், கிழக்கிலும் ஏற்பட்டுள்ள சேதங்களைச் சீர்திருத்தும் வேலையில் இராப்பகலாக ஈடுபட்டிருக்கிறார்கள்.

பாதிக்கப்பட்ட அகதிகளுக்கு ரேஷன் உணவுப்பொருட்களை முன்னதாகவே கொடுக்கும் படியும், சேதமடைந்த வீடுகளைப் பழுதுபார்க்கும் படியும் உத்தரவிடப்பட்டிருக்கிறது.

மன்னூர்க் கரைக்கு 7 மைல் தூரத்திலிருந்து இலங்கை கடற்படைக் கப்பல் கஜபாகு உணவுப் பொருட்களை படகு மூலம் கரைக்கு அனுப்பிவருகிறது.

நேற்றிரவு முதல் கொள்ளை, வீடு உடைப்பு ஆகியவற்றைத் தடுக்குமுகமாக திருகோணமலை நகரில் கடற்படையினர் ரோந்து சுற்றி வருகின்றார்கள்.

மன்னூருக்கு உணவு சப்ளை போதுமான அளவு கிடைக்கவில்லை என கடைசிச் செய்திகள் கூறுகின்றன. கடற்படை விமானங்கள் போடும் உணவு பொட்டலங்கள் போதுமான அளவு இருக்கவில்லை என்றும், ஏராளமான மக்கள் பல நாட்களாக பட்டினியால் வாடிவருவதாயும் அறிவிக்கப்படுகிறது.

திருமலைக்கருகிலுள்ள மூதூர் கிராமம் பெரும்பாலும் சீரழிந்து விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

மரண அறிவித்தல்

மண்டைதீவு பிரபல வர்த்தகர் இ. ஆ. பொன்னம்பலம் அவர்கள் நேற்று பி.ப. ஒரு மணிக்கு சிவபதம் அடைந்துள்ளார். 29-12-64-ல் மாலை இரண்டு மணிக்கு மண்டைதீவு மயானத்தில் ஈமக்கிரியை நடைபெறும். உறவினர்களும், நண்பர்களும் இதனை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

பொ. நடனசபாபதி, மண்டைதீவு, 28-12-64. 1377

துயருறும் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கவர்னர் ஜெனரலுடன் அவரது மகனும் பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. என். கியூ. டயஸ், இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் உடுகம, விமானப்படை பதில் தளபதி, மற்றும் இராணுவ அதிகாரிகள் ஆகியோர் வந்திருந்தனர். இவர்களை கடற்படைத் தளபதி கமாண்டர் ராஜன் கதிர்காமர், யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜெயவீரா, வலி. வடக்கு காரியாதிகாரி திரு டி. முருகேசம்பிள்ளை, பகுதி பொலிஸ் சுப்பிரின்டன்ட் வான்சான்டன், யாழ்ப்பாணம் உதவிப் பொலிஸ் சுப்ரின்டன்ட் திரு. ஏ. எஸ். மரியநாயகம், காங்கேசன்துறை உதவி பொலிஸ் சுப்ரின்டென்ட் திரு. சேனரத், உதவி சுங்கக் கலக்டர், மயிலிட்டி கிராமசபைத் தலைவர் திரு. அருணாசலம் ஆகியோர் விமானநிலையத்தில் வரவேற்று மயிலிட்டிக்கு அழைத்துச் சென்றனர்.

கவர்னர் ஜெனரலுக்கும் பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கும் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் புயலினால் இங்கு ஏற்பட்ட சேதங்கள் பற்றி எடுத்துக் கூறினார். மயிலிட்டியில் 858 பேர் மாண்டுவிட்டதாகவும் பலாலியில் 10 பேரும் காரைநகருக்கும் தாளையடிக்குமிடையில் 10 பேரும் மாண்டுவிட்டதாகவும் அவர் தெரிவித்தார். 5,000 வீடுகள் கடும் சேதமுற்றதாகவும், வாழை, வெங்காயம் ஆகிய பயிர்கள் முற்றிலும் அழிந்துபோய்விட்டதாகவும் நெற்பயிர் வழமையான விளைச்சலில் 10 சத விகிதமாக குறைக்கப்பட்டு விட்டதாகவும் அரசாங்க அதிபர் அறிவித்தார்.

இரு பெண்கள் மயங்கி விழுந்தனர்

கடற்படை மோட்டார்கார் ஒன்றில் கவர்னர் ஜெனரல் விமானநிலையத்திலிருந்து மயிலிட்டிக்குச் சென்றார். அங்கு வீதியோரங்களிலும் வீட்டுவாசல்களிலும் கூட்டங்கூட்டமாக கூடிநின்று அழுதுகொண்டிருந்த பெண்களுக்கும் கண்கலங்கி நின்ற ஆண்களுக்கும் அவர் ஆறுதல் சொன்னார். அவர்கள் மத்தியில் கவர்னர் ஜெனரல் பின்வருமாறு கூறினார்:

இப்பகுதியில் நிகழ்ந்த இக்கோர சம்பவங்களையிட்டு நானும் எனது அரசாங்கமும் ஆழ்ந்தகவலை கொண்டுள்ளோம். இன்று இங்கு பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா நேரில் வந்து ஆறுதல்சொல்வதாக இருந்தது. ஆனால் அவர் கடுமையான சுகவீனமடைந்திருப்பதால் டாக்டர்களின் ஆலோசனையின் மீது அவர் இங்கு வரமுடியாது போய்விட்டது.

உயிர்ச்சேதம் ஏற்பட்டுவிட்டது. இது ஆற்றமுடியாத துக்கம் தான். என்றாலும் அதை நினைத்துஅழுதுகொண்டிருப்பதால் மாண்ட உயிர்கள் மீண்டுவிடா. இனி உங்களையும் உங்கள் பிள்ளைகளையும் பாதுகாத்துக்கொள்வதற்கான முயற்சிகளைச் செய்ய வேண்டும். உங்களுக்கு சாத்தியமான சகல உதவிகளையும் அளிப்பதற்கு அரசாங்கம் சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. உங்களுக்கு வேண்டிய உதவிகளை உடனடியாக அளிப்பதற்கு அரசாங்க அதிபருக்கு உத்தரவிட்டுள்ளேன்."

கவர்னர் ஜெனரல் பேசிக்கொண்டிருக்கையில் இருபெண்கள் மயங்கிக் கீழே விழுந்தனர். அவர்களுக்கு பாதுகாப்பு அதிகாரிகள் முதலுதவியளித்து மூர்ச்சை தெளிவித்தனர்.

கவர்னர் ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லவா தொடர்ந்து பேசுகையில் சூறாவளியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி அளிப்பதற்காக தென் இலங்கையிலுள்ள ஸ்தலஸ்தாபனங்களும் மத, இன வேறுபாடின்றி முன்வந்துள்ளன என்றும் கூறினர்.

1947-ம் ஆண்டில் அப்பொழுது இலங்கையின் கவர்னர் ஜெனரலாகவிருந்த சோல்பரி பிரபு யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தபின் இலங்கையரான கவர்னர் ஜெனரல் ஒருவர் இங்கு வந்தது இதுதான் முதல்தடவை.

யாழ்ப்பாணத்துக்கும் திருக்கோணமலை, வவுனியா, மன்னார் ஆகிய இடங்களுக்கும் கவர்னர் ஜெனரலும் அவரது கோஷ்டியினரும்சென்று பார்வையிட்ட பின்னர் மாலையில் கொழும்பு திரும்பினர்.

இந்தோனேஷிய துருப்புகளின் இறுதி முயற்சியும் தோல்வி

மலேசியா துரித நடவடிக்கை

கோலாலம்பூர், டிச 28

கோலாம்பூருக்கு தெற்கே பத்துமைல் தூரத்தில் மலேசியாவை முற்றுகையிட இந்தோனேஷிய துருப்புகள் மேற்கொண்ட இறுதி முயற்சியும் நேற்று தோற்கடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. முற்றுகையிடும் முயற்சியில் ஈடுபட்ட 13 இந்தோனேஷிய துருப்புகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மூவர் கொல்லப்பட்டனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மலேசியாவை முற்றுகையிட இம்மாதத்தில் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் சகல நடவடிக்கைகளும் மலேசியத் துருப்புகளினால் முறியடிக்கப்பட்டது. கடந்த வாரத்தில் மேலும் 13 இந்தோனேஷிய துருப்புகள் கைதுசெய்யப்பட்டனர்.

மலேசியா அடுத்த வருடம் ஜனவரி மாதத்துக்குள் நசுக்கப்படும் என்று இந்தோனேஷிய அதிபர் டாக்டர் சுகர்னோ அறிவித்திருக்கிறார்.

எட்மண்ட் போட்டியிடார்

கொழும்பு, திங்கள்

சமசமாஜக்கட்சி (புரட்சிக் குழு) யைச்சேர்ந்த திரு. எட்மண்ட் சமரக்கொடி அடுத்த பொதுத்தேர்தலில் போட்டியிடமாட்டாரென அறிவிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் குழுக்கூட்டத்திலேயே இவ்வித தீர்மானம் செய்யப்பட்டது, காங்கேசன்துறையில் கட்சி சார்பில் திரு. காராளசிங்கத்தை நிறுத்துவதெனவும் கொழும்பு மத்தித் தொகுதியில் திரு. எஸ். மல்லவாராய்ச்சியையும், மொறட்டுவையில் திரு. மெரில் பெர்னாண்டோவையும் நிறுத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

அமெரிக்க

ஹெலிகாப்டர் சுடப்பட்டது

சைகோன், டிச. 28

தென் வியட்னாமின் தலைநகரமான சைகோனுக்கு அருகே நேற்று மாலை வியட்காங் கொரில்லாக்கள் அமெரிக்க ஹெலிகாப்டர் ஒன்றை சுட்டுவீழ்த்திவிட்டதாக அறிவிக்கப்படுகிறது. ஹெலிகாப்டர் சுட்டுவீழ்த்தப்பட்ட பொழுதிலும் அதிலிருந்த விமானி உயிர் தப்பிவிட்டதாக செய்திகள் கூறுகின்றன. நான்கு அமெரிக்கர்கள் பலத்த காயமடைந்துள்ளனராம்.

கட்டுப்பணம் கட்டினர்

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணத் தொகுதியில் போட்டியிடும் தமிழரசுக்கட்சி அபேட்சகர் திரு. ஸி. எக்ஸ் மார்ட்டின் தமது கட்டுப்பணத்தை நேற்று கச்சேரியில் கட்டினார். கட்டுப்பணம் கட்டிய முதல் அபேட்சகர் யாழ்ப்பாணத்தொகுதியில் இவர்தான்.

அங்கத்தவர்களை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாயகத்தை பாதுகாக்க வேண்டுமா? அடுத்த வீட்டில் தீ பிடித்தால் நாம் சும்மா பார்த்துக் கொண்டிருக்க முடியுமா? அத் தீ நமது வீட்டிற்கும் பரவுமுன் அணைக்க வேண்டாமா? இலங்கை முழுவதும் ஜனநாயகம் அழிந்து சர்வாதிகாரம் ஏற்பட்டால் தமிழ் மக்களும் பாதிக்கப்படுவார்கள். ஆதலால் ஜனநாயகத்தை பாதுகாக்க போராட வேண்டும்.

தமிழ் மக்களின் ஒற்றுமை இருக்குமானால் சிங்கள அரசாங்கம் எதுவுமே செய்ய முடியாது. தமிழ் தொகுதிகளிலெல்லாம் போட்டியில்லாமல் திறமைசாலிகளை திரு. செல்வநாயகம் அனுப்ப முன்வந்தால் தான் விலகிக்கொள்ள தயார்.

திரு. செல்வநாயகத்திற்கு இன்னும் பத்துநாள் தவணை கொடுக்கின்றேன். ஜனவரி 9ம் தேதிக்கு முன் திரு. செல்வநாயகம் இதற்கு ஒரு முடிவு காணவிட்டால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் எல்லாத் தொகுதிகளிலும் தமிழரசுக் கட்சியை எதிர்த்து தகுந்த அபேட்சகர்களை நிறுத்துவேன் என்பதை பகிரங்கமாக கூறுகின்றேன். கடந்த 10 வருட காலமாக திரு. செல்வநாயகத்தையும் தமிழரசுக் கட்சியையும் அனுப்பினீர்கள். இந்த முறை என்னுடன் ஏழு எட்டு திறமைசாலிகளை அனுப்பினால் நான் எப்படி தமிழ் உரிமைகளை பெற்றுத் தருகிறேன் என்று நீங்களே பார்த்துக் கொள்வீர்கள்".

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் ஊர்வலம் நல்லூரிலிருந்து நேற்று மாலை 4 மணிக்கு ஆரம்பமானது. வைமன்வீதி, பலாலி வீதி, ஸ்ரான்லிவீதி, காங்கேசன்துறைவீதி, ஆஸ்பத்திரி வீதி வழியாக கோட்டை மைதானத்தை இரவு 7 மணிக்கு வந்தடைந்தது.

தமிழ் காங்கிரஸ் சூறாவளி நிதி

நேற்று மாலை நடைபெற்ற அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கூட்டத்தில், கடந்த வாரம் ஏற்பட்ட சூறாவளியினால், பாதிக்கப்பட்ட மக்களுக்காக தமிழ் காங்கிரஸ் புயல் நிவாரண நிதி ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், அந்த நிதிக்கு 10001 ரூபா வழங்கி ஆரம்பித்துள்ளதாகவும் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தெரிவித்தார்.

சூறாவளியினால் மயிலிட்டியில் உயிர்நீத்த நூற்றுக்கணக்கான கடற்றொழிலாளர்களுக்காகவும், மற்றும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் உயிர்நீத்தவர்களுக்காகவும், அவர்களின் ஆத்மா சாந்தியடைவதற்காக, கூட்ட ஆரம்பத்தில் இரு நிமிடநேரம் மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

பதவியாவுக்கு வைத்தியக் கோஷ்டி

கொழும்பு, திங்கள்

இடத்துக்குஇடம் செல்லும் வைத்திய பிரிவுக் கோஷ்டியொன்று பதவியா சென்றுள்ளது. அங்கு சுகாதார வசதிகள் பெருமளவில் அளிக்கப்படுகின்றன.

விற்பனைக்கு

கடைசியாக வந்த ஸ்டொக் நீசிற்றுடன் கபினெட் சிங்கர் தையல் மெஷின் கீழ்க்கண்ட இடத்தில் பெற்றுக்கொள்ளலாம். மாசில்லா மாளிகை, அச்சுவேலி. 1376

'ஈழநாடு'
தினக்குறிப்பு
1965
விற்பனையாகின்றது
விலை ரூபா 1-50.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 29-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.